
மேஜர் ஒல்லியா

நவயுகப் பிரசுராலயம்

நவயுகப் பிரசுராலயம்
ஜீ.டி.சென்னை

மேஹர் - உன்னிஸா



நவயுகம் பிறந்திருக்கிறது!

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்,
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.'

பாரதியார் இந்த இரண்டு உத்தரவுகளை நமக்கு இட்டுச் சென்றார். இவற்றின்படி தொண்டு செய்யவே நவயுகப் பிரசுராலயம் தோன்றியிருக்கிறது.

புதுப் புது எழுத்தாளரைக் கண்டுபிடிப்பதும், பழைய எழுத்தாளருக்கு ஊக்கம் கொடுப்பதும், ஆயிரக் கணக்கான புது நூல்களைத் தமிழில் வெளியிடுவதும் நவயுகப் பிரசுராலயத்தின் வேலை.

எழுத்தாளர்கள் தங்கள் நூல்களை அளித்துப் பிரசுராலயத்துடன் ஒத்துழைக்கும்படி வேண்டுகிறோம். ஆயிரக் கணக்காகப் பெருகிவரும் தமிழ் வாசகர்கள் மேலும் மேலும் நவயுகப் புஸ்தகங்களை வாங்கிப் படித்து ஊக்கமளிக்க வேண்டுகிறோம்.

நவயுகப் பிரசுராலயம் லிமிடெட்

2/28, மூக்கர் நல்லமுத்து தெரு,

ஜார்ஜ் டவுன், சென்னை.

மேஹர்-உன்னிஸா

ஆசிரியர்

கமலா காந்த வர்மா

மொழிபெயர்ப்பாசிரியர்

அ. கி. ஜயராமன்

ஜி. டி. சென்னை

[விலை 0-8-0

ஜுபிடர் பிரஸ், சென்னை.

மேஹர்—உன்னிஸா

முதல் அத்தியாயம்

விசாலமான தாமோதர நதி, தன் மார்பினுல் பிரளயத்தின் அலை மூச்சுக்களை விட்டுக்கொண்டு, அந்த இருள் மயமான இரவில், வெறி கொண்டதைப் போல எங்கு சென்று கொண்டிருக்கிற தென்பதை யார் அறிவர்? அதன் கூடவே துல்லியமான வெள்ளிய அலை அடுக்குகள் ஓசையிட்டுக் கொண்டிருந்தன. அந்தப் பயங்கரமான கர்ஜனையைக் கேட்டு—தாமோதர நதியின் அந்த ரௌத்திராகாரத்தைக் கண்டு—இயற்கையின் சகல ஜடங்களும் நிசப்த மடைந்திருந்தன.

அருகேயே மணல் பிரதேசத்தைத் தொட்டாற் போல் ஓர் அடர்ந்த மாந்தோட்டம். காரிருள் அரசு புரியும் அந்த இடத்தில் மரக் கிளைகளின் வழிகளிலும் இலைகளின் சந்துகளிலும் நுழைந்து கொடுத்துக்கொண்டு மரத்தைச் சுற்றிக் கொண்டிருக்கும் கொடிகளின் மேல் சந்திரனின் ஒளி விழுந்துகொண்டிருந்தது. அந்த மாந்தோட்டத்தின் மற்றொரு புறம் ஒரு மாளிகை.

இயற்கை சந்தடியற்று நிசப்தமாக இருந்தது. யாவும் நித்திரையின் மாய வலையில் மூழ்கிக் கிடந்தன. மிருதுவான நடுநிசியின் மூச்சுக் காற்று, மரத்தின் மேல் வீசும் சந்திரனொளி, அந்தகாரத்தில் பாதி மலர்ந்த மொட்டுகள், உலகில் ஆதிகாலம் முதல் நித்திரையற்று நீல வானில் விழித்துக்

கொண்டிருக்கும் நக்ஷத்திரங்கள் — இவை மாத்திரமே விழித்துக்கொண்டிருந்தன.

நதியில் ஓடம் இல்லை. அந்த இரவில் யார் அக்கரை செல்லப் போகிறுர்கள்? வழிப்போக்கர்கள் தங்கும் விடுதி யின் கதவு தாளிடப்பட்டிருந்தது. வீடுகளில் உள்ள விளக்குகள் மங்கிக் கிடந்தன. ராஜ வீதி நிசப்தமாக இருந்தது. திக்கற்ற இரண்டொரு கிராமத்து நாய்கள் மாத்திரம் அந்த இருளில் அவ்வப்பொழுது குரைத்துக்கொண்டிருந்தன.

அந்த ஆழ்ந்த இரவில் மாங்தோட்டத்திற்குள் இருக்கும் விசாலமான மாளிகையின் ஓர் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வேலைக்காரி ஒருத்தி அதன் மங்கிய ஒளியில் அமர்ந்து, தன் இஷ்டப்படி சாமான்களை ஒன்று சேர்த்து மூட்டை கட்டிக்கொண்டிருந்தாள். உடனுக்குடன் அவள் வாசற்படியின் பக்கம் பார்த்துக்கொண்டும் இருந்தாள்.

அப்பொழுது அந்த அறைக்குள் உயரமான, சிவந்த மேனியுள்ள சுந்தரி ஒருத்தி வாடிய முகத்துடன் பிரவேசித்தாள். நாற்புறமும் திரும்பிப் பார்த்துவிட்டு, ஒரு பெரு மூச்சுடன், 'மர்ஜானு!' என்றுள்.

'என்ன பீபீ?'

'உன் வேலை இன்னும் ஆகவில்லையா? இரவு வெகு நேரமாகிவிட்டதே! ஏன் வீணுகத் தாமதம் செய்துகொண்டிருக்கிறுய்? அவைகளெல்லாம் என்ன?'

'சாமான்களின் மூட்டை!'

அந்தக் கட்டழகி அவற்றின் பக்கம் ஒரு தரம் வெறுப்புடன் பார்த்துவிட்டு, 'இவைகளெல்லாம் எதற்காக?' என்றுள்.

'எனக்கு என்னென்ன அவசியமோ அவைகளையெல்லாம் எடுத்துக்கொள்ளுகிறேன்!'

'அதில் என்ன இருக்கிறது?'

'ரத்தினங்கள், முத்துக்கள், ஆபரணங்கள், வேலைப் பாடுள்ள தலையணிகள், சில வெள்ளிப் பாத்திரங்கள்!'

'உன் மூஞ்சி! நீ நாசமாய்ப் போனாய்! இதையெல்லாம் தூக்கி அந்தத் தாமோதர நதியில் வீசி எறி! ஒரு நாள் இவைகளை யெல்லாம் ஆசையுடன் ஒன்றுசேர்த்தேன்.— இப்பொழுது அந்த ஆசை ஒழிந்தது. பைத்தியக்காரி! நான் என்ன கிராமத்துப் பெண்களைப் போலப் புக்ககம் போகிறேனா, அதற்காக நீ இத்தனை ஏற்பாடுகள் செய் கிறாய்?' என்றாள் அந்த ரமணி.

இந்த வார்த்தைகளைக் கேட்டுத் தோழி ஆச்சரியத்தில் மூழ்கினாள். 'இவைகளெல்லாம் ஆக்ராவில் ரொம்ப உபயோக மாக இருக்கும். அவசிய மில்லாவிட்டால் நான் ஏன் இவை களைக் கட்டிவைக்கப் போகிறேன்?' என்றாள்.

'நான் ஆக்ரா போகப் போகிறேன் என்று உன்னிடம் யார் சொன்னார்கள்? நான் ஆக்ராவுக்குப் போவதாக இருந் தால் இந்த மாதிரி மறைந்து செல்லுவானேன்?'

'பின்னே ஓடத்தைத் தயாராக வைக்கும்படி எதற் காகக் கூறினாய்?'

'தாமோதரத்தைக் கடக்க வேண்டும் — அதற்காக மாத்திரம்தான்!'

'கடந்து எங்கே போகப் போகிறாய்?'

'கண்ணுக் கெட்டிய தூரம்வரை!' அவளால் அதற்கு மேல் பேச முடியவில்லை. அவள் கண்களில் கண்ணீர் துளித்தது.

மர்ஜானா வெகு நாளா யிருந்துவரும் தாதி! எந்த விஷ யத்தையும் தன் தலைமேல் எடுத்துப் போட்டுக்கொண்டு பேசு வதுதான் அவள் சுபாவம். அவள் சற்றுக் கோபமான குர லுடன், 'ஆக்ராவுக்கும் போகமாட்டாய்! இங்கேயும் இருக்க மாட்டாய்! இந்த உலகத்தில் உனக்கு இடம்தான் எங்கே

இருக்கிறது? இந்த வீட்டை விட்டுவிட்டு; இருக்க இடமற்றவளாகப் போகிறுய்! வழியில் வயிற்றுப் பசியின் ஜ்வாலையை எப்படித் தணிப்பாய்?' என்றுள்.

அந்த அழகி வருத்தம் நிறைந்த குரலில், 'மர்ஜானு! யாருடைய ராஜ்யத்தில் ஓர் எறும்புகூடப் பட்டினி கிடக்கவில்லேயோ, அந்த அரசர் எனக்கும் போஜன மளிப்பார். ஒன்றுமே இலலாமல், பிச்சைகூடக் கிடைக்காவிட்டால், வழியிலேயே பசியால் மடிந்து எங்காவது வீழ்கிறேன்!' என்றுள்.

தாதி இந்தத் தடவை இன்னும் அதிகக் கோபத்துடன் 'உனக்கு எல்லாமே தலேகீழ்ப் பாடம்தான்! உன்னுடைய அபிப்பிராயத்தில் இல்லாமல் இருக்கலாம், ஆனுல் இந்த உலகில் நம் போன்றவர்களுக்கு வேண்டிய இடம் இருக்கிறது. ஆக்ராவில் — தங்கத்தால் செய்து நவரத்தினம் இழைத்த சிம்மாதனத்தில் அமர்ந்து கால் ஆட்டுவதை விடுத்து, பசி தாகத்தால் இறப்பது அதிக சுகமா?' என்றுள்.

'உனக்கு இஷ்டமில்லாமல் போனுல் போகட்டும், நான் இந்த ஐச்வரியம் யாவற்றையும் உனக்குக் கொடுத்துவிடுகிறேன். நீ அனுபவி! நான் என்னவோ இப்பொழுதே இதை விட்டுப் போய்விடுவேன்!' என்றுள்.

தாதி இவ்வளவு நாள்வரை அன்புடனும் ஆதரவுடனும் நடத்தப்பட்டு வந்தவள். இந்தத் திரஸ்கார வார்த்தைகள் அவள் கண்களினின்றும் நீர் முத்துக்களேப் பெருக்கின. மர்ஜானு தழுதழுத்த குரலில், 'சொல்வதைக்கூடக் கேட்கமாட்டாயா? சரி. போய்ப் பார்! திரும்பி வரும்படியாகத்தான் ஆகப்போகிறது!' என்றுள்.

அறையின் விளக்கை அணேத்துவிட்டு, அந்த இரு பெண்மணிகளும் அந்தகாரம் மண்டிய அந்த மாளிகையின் வாயிலேக் கடந்து வெளியே வந்தனர்.

மேலே பரந்த நீல வானம். கணக்கற்ற வைரத் துணுக்குகள் போன்று அதில் நக்ஷத்திரங்கள் ஜோதி மயமாக விளங்கின. அருகேயுள்ள நந்தவனத்தில் பாதி மலர்ந்திருந்த மொட்டுகளினின்றும் கிளம்பிய நறுமணத்துடன் மென் காற்று வீசிக்கொண்டிருந்தது. முன்னும் பின்னும், இடமும் வலமும், நாற்புறமும் ஒரே இருள்! அந்த இருளை வெட்டிக் கொண்டு வீட்டைத் தியாகம் செய்த இரு ஜீவன்களும் நடந்தன. உள்ளத்தைப் பிளந்துகொண்டு வரும் ஒரு பெரு மூச்சு அந்த நிசப்தத்துடன் சென்று கலந்தது. ஆஹா, என்ன துர்ப்பாக்கியம்!

அழகி முன்னே சென்றாள். தோழி பின்னே சென்றாள். இருவரும் மௌனமாகச் சென்றனர். தோட்டத்தைச் சுற்றி நதிக்கரையில் சில அடிகள் சென்றிருப்பார்கள். அதற்குள் அந்த ரமணியின் புடவையை யாரோ பற்றி இழுத்தார்கள். அந்த நள்ளிரவில் மர்ஜானாதான் பயத்தினால் தன்னைப் பிடித்திழுக்கிறாள் என்பதை உணர்ந்த அந்த ரமணி, 'மர்ஜானா! என் பக்கத்தில் வா! ஆச்சு, இதோ கிட்டத்தான், இன்னும் அதிகத் தூரம் இல்லை!' என்றாள்.

மர்ஜானா உளறும் குரலில், 'அம்மா, நதி தீரம், தலை சுற்றவில்லையா? ரொம்பப் பயமாக இருக்கிறது, பீபீ! இங்கு மங்கும் காலடிச் சத்தங்கள் கேட்கின்றனவே!' என்றாள்.

'உன் மூஞ்சி! நாய் நரி கூட அதன் வழியே போக விட மாட்டாயா? சீக்கிரம் வா!'

இருவரும் ஆற்று மணலில் வந்து நின்றனர். அருகே ஓர் ஓடத்தில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

'இப்பொழுது கூட யோசிக்கச் சமயம் இருக்கிறதா என்ன? நாம் இருவரும் ஸ்திரீகள்! பெண் காவலாளிகளும் கூட இல்லை! பீபீ! இந்த வழியில் உன் ரூபத்திற்கு யாராவது சத்துருக்கள் இருப்பார்கள்!' என்றாள் மர்ஜானா.

'அதற்கு உபாயம் தேடியிருக்கிறேன், மார்ஜானு! பகலில் வழி நடக்க மாட்டேன். இரவிலேயே செல்வேன். அப்படியும் கூட ஏதாவது ஆபத்து வந்தால் அதற்காகக் கையில் விஷமும் கொண்டு வந்திருக்கிறேன். யாருக்குப் பயம்?' என்று கூறி, கண்ணீர் பொங்கும் கண்களுடன் தன் பிரியமான வாசஸ்தலத்தை ஒரு முறை ஆசையுடன் பார்த்து விட்டு, உள்ளத்தை வெட்டிக்கொண்டு வந்த ஒரு பெரு மூச்சை விடுத்தாள். பிறகு, 'மார்ஜானு! வா, தண்ணீரில் இறங்கி ஓடத்தில் ஏறுவோம்!' என்றாள்.

ஓடத்தில் ஏற முடியவில்லை. கண்ணுக்குப் புலப்படாத ஒரு பிரதிபிம்பத்தினுல் அவர்களுடைய வேகம் தடைப்பட்டது. சுந்தரியின் சிவந்த பாத மலர்கள் தாமோதர நதியின் சேற்றில் அசைவற்று நின்றுவிட்டன!



இரண்டாம் அத்தியாயம்

ஆயுதமணிந்த இரு வீரர்கள் கையில் தீவர்த்திக ளுடன் மெள்ள ஓடத்தினின்றும் இறங்கி, அவர்கள் எதிரே வந்து நின்றனர். இரு வீரரும் ஒரே குரலில், 'பாதுஷா நீடூழி வாழ்க! பேகம் ஸாஹிபாவுக்கு ஜே!' என்று கோஷித்தனர்.

'பாதுஷா!' 'பேகம்!' இவைகளெல்லாம் என்ன? சேற் றில் அழுந்திய தன் மெல்லிய பாதங்களை எடுத்துவைத்துச் சற்று தூரத்தில் போய் நின்று, ஒரு முறை கடுமையான பார்வையுடன் அந்தச் சைனிகர்களைப் பார்த்தாள் மேஹர்-உன்னிஸா. காலின் கீழே பயங்கரமான நாகத்தைக் கண்டு வழிப்போக்கன் எப்படித் திடுக்கிடுவானோ, அப்படி மேஹர்-உன்னிஸாவும் திடுக்கிட்டாள். ஒரு கணத்தில் யாவற்றை யும் அறிந்தாள். பாதுஷா அவளை ஆக்ராவுக்கு அழைத் துச் செல்லச் சேனை அனுப்பியிருந்தான். ஆகையால் அவள் பர்த்வானிலிருந்து சீக்கிரம் புறப்பட்டுவிட முயற்சி செய்துகொண்டிருந்தாள். ஆனால், அவளுடைய அந்த முயற்சிகள் வீணாயின.

அந்த இரு வீரர்களில் ஒருவன் கிழவன். மற்றொருவன் வாலிபன். மேஹர், வீரமான குரலுடன் வீரர்களை அழைத்து, 'நீங்கள் யார்? எங்கள் ஓடத்தில் எப்படி வந்து அமர்ந்தீர்கள்?' என்று கேட்டாள்.

தீவர்த்திகளின் வெளிச்சம் அந்த எழில் மிக்க சுந்தரி மேஹர்-உன்னிஸாவின் முகத்தில் விழுந்தது. அவளுடைய தேஜோமயமான முகத்தையும், அவளுடைய வாக்கிய வின் யாசங்களையும் கண்டு வாலிப சேனாபதியின் உள்ளம் நடுங்கி யது. வயோதிகன் முன்வந்து, 'நாங்கள் டில்லி அதிபதி

யின் சேனைத் தலைவர்கள், நாங்கள்தான் தங்கள் ஓடத்தை ஆக்கிரமித்தோம். இந்தச் செய்கைக்காக எங்களை மன்னியுங்கள். நாங்கள் உத்தரவை நிறைவேற்றும் ஊழியர்கள் தானே!' என்றான்.

'யாருடைய உத்தரவின் மேல் நீங்கள் ஓடத்தை ஆக்கிரமித்தீர்கள்?'

'டில்லி அதிபரின் உத்தரவின் பேரில்!'

'உங்கள் டில்லி அதிபர் ரொம்ப நல்ல மனிதர்தான்? சகாயமற்றுக் கண்ணியமாக வாழும் குடும்பத்தின் அந்தப்புர ஓடத்தை ஆக்கிரமிக்கச் சேனை அனுப்பி, அவர் செய்திருக்கும் காரியம் தகுதியானதுதா னல்லவா?'

இந்தத் திரஸ்காரம் கடுமையாக இருந்தது. ரஹமத் - விருத்த சேனபதி - இதை அறிந்தும் சும்மா இருந்தான்.

மேஹர் மீண்டும் ரஹமதை நோக்கி, 'அலங்காரங்களையும் ஆயுதங்களையும் கண்டால் தாங்கள் ஓர் உயர்ந்த பதவி வகிக்கும் சேனபதியாகக் காணப்படுகிறீர்கள்? தாங்கள் திருடர் போல் என் அந்தப்புரத்திற்குள் ஏன் வந்தீர்கள்?' என்றாள்.

'டில்லி அதிபரின் உத்தரவு!'

'முட்டாள்! தகுதியற்றவன்! இந்த நீசமான கட்டளையை நிறைவேற்ற, சேனபதியா யிருக்கும் உங்களுக்கு வெட்கமாக இல்லையா? வெட்கம்!' என்றாள் மேஹர்.

வயோதிக சேனபதி கலங்காமல், 'பீபீ! எது சொன்னலும் கேட்டுக்கொள்ளுகிறேம்; ஆனல் இதில் எங்கள் குற்றம் என்ன இருக்கிறது?' என்றான்.

மேஹர் கோபத்துடன், 'கட்டளையை நிறைவேற்ற ஒரு நியமம் இல்லையா? நியாய அநியாயத்தைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டாமா? பாதுஷா உங்களைத் திருடரைப்

போலவா என் அந்தப்புரத்தில் நுழையச் சொன்னர்? கான் ஸாஹேப்! இந்த மாளிகையின் வாசலில் இப்பொழுதுகூட அநேகம் காவலாளிகள் உறங்கிக்கொண்டிருக்கின்றனர். உத்தரவிட்டால் உங்களைச் சின்னபின்ன மாக்கிவிடுவார்கள்!' என்ருள்.

'நாங்கள் சாகப் பயப்படவில்லை. இந்த மாந்தோட்டத்தில் நாலா பக்கமும் வீரர்கள் உறங்கிக்கொண்டிருக்கின்றனர். நாங்கள் இறந்தால் புதிய சேனதிபதி வந்து ஷேர்கானின் காவலாளிகளை ஆக்கிரமிப்பார்!'

மேஹர்-உன்னிஸாவின் உள்ளம் அனுயாசமாக வெடித்துவிடும் போல் ஆகிவிட்டது! ஆனல் அவளைப் போன்ற வீரப் பெண்மணிகளுக்கு அந்த மாதிரி ஆபத்துக்கள் சாதாரணம்தான். அவள் தன்னுடைய அப்போதைய நிலைமையை அறிந்தாள். கலங்காத குரலுடன், 'உங்கள் பெயரென்ன?' என்ருள்.

'இந்த அடிமையின் பெயர் ரஹமத்கான்! நான்தான் பிரதான சேனதிபதி!'

மேஹர் சமயத்திற்கு ஒத்த இனிய குரலுடன், 'ரஹமத்! டில்லி அதிபர் என்னைக் கைது செய்யவா உத்தரவிட்டிருக்கிருர்?' என்ருள்.

'இல்லை! தங்களை மஹாராணியைப் போல் அழைத்து வரச் சொல்லியிருக்கிருர்!'

'பின்னே நீர் ஏன் என் மாளிகையைச் சூழ்ந்துகொண்டீர்?'

'நாங்கள் இங்கு வந்து சேருமுன் வழியிலேயே ஒற்றர்கள் மூலம், தாங்கள் இன்றே பர்த்வானை விட்டுச் செல்வதாகக் கேள்விப்பட்டோம். துரதிர்ஷ்டவசமாக எங்களுக்குத் தாமதம் ஆகிவிட்டது. தாங்கள் சென்றிருந்தால் எங்கள் தலையும் சென்றிருக்கும்!'

மேஹர்-உன்னிஸா திடசித்தத்துடன் என்ன யோசித்தாளோ, ரஹமதை நோக்கி, 'சற்று தூரம் வாருங்கள். உங்களிடம் ஒரு விஷயம் சொல்லவேண்டும்' என்றாள்.

அவள் முன்னே சென்றாள். அவள் பின் ரஹமத் சென்றான். சிறிது தூரம் சென்று இருவரும் அந்தப் பயங்கரமான நதிக்கரையில் ஓர் இடத்தில் நின்றனர். மேஹர் கம்பீரமான குரலுடன் 'சேனாபதி!' என்றாள்.

'கட்டளையிடுங்கள்!'

'நான் வராவிட்டால்? — '

'நாங்கள் மாளிகையைச் சூழ்ந்திருக்கிறோம். காலையிலேயே பாதுஷாவுக்குச் செய்தி தெரிவிப்போம். என்ன உத்தரவு கிடைக்கிறதோ அப்படிச் செய்வோம்!'

மேஹர்-உன்னிஸா மௌனமாக இருந்தாள். 'நீர் பிரதான சேனாபதி யல்லவா? எத்தனை ஆயிரத்திற்குத் தலைவர்?' என்றாள்.

'ஓராயிரத்திற்கு!'

'சம்பளம் ஒருகால் ஐயாயிரம் இருக்கலாம், அல்லவா?'

'உத்தரவு கொடுங்கள்!'

'நான் உமக்குப் பத்தாயிரம் மோகராக்கள் தருகிறேன்! என்னிடம் இருக்கும் ரத்தினங்கள் யாவையும் உமக்குத் தருகிறேன்! உம்மைச் செல்வந்தராக ஆக்கிவிடுகிறேன்! என்னை விட்டுவிடும்!'

இந்தக் கருணை பொருந்திய வேண்டுகோள் ரஹமதின் உள்ளத்தை இளகச் செய்துவிட்டது. அவன் அந்தத் தீட்சண்ய புத்தியுள்ள பெண்மணியின் மனோபாவத்தை அறிந்துகொண்டான். கடைசியில் அவன், 'பாதுஷாவுக்கு என்ன சொல்வேன்?' என்றான்.

' "அவளைப் பிடித்துக்கொண்டு வந்தேன். ஆனால் வழியில் அவள் விஷம் அருந்திவிட்டாள்! ஆகையால் அவள்

உடலைத் தாமோதர நதியில் போட்டுவிட்டோம்!'' என்று சொல்லிவிடும்!' என்றாள் மேஹர்.

'அம்மா! நீங்கள் டில்லி அதிபரை அறியமாட்டீர்கள்! அவர் இதை நம்பவே மாட்டார். எங்கள் உடல் நாய் நரிகளுக்கு இரையாகும். இன்னொரு விஷயம்: டில்லி பாதுஷாவின் சேனாபதிகள் இன்றுவரை நம்பிக்கைத் துரோகம் செய்யக் கற்றுக்கொள்ளவில்லை. தங்களை விட்டுவிட வேண்டுமானால், ஒரு சுத்த வீரனைப் போல, ஒரு வீர சேனாபதியைப் போல, விட்டுவிடுகிறேன். அதற்காக என் உயிரை இழக்கிறேன். ஆனால் பாதுஷாவுக்கு ஒருமுறை தெரிவிக்காமல் விட முடியாது!' என்றான் ரஹமத்கான்.

மேஹர் இது முடியாததென்று நினைத்தாள். உள்ளத் துடிப்பின் வேகத்தால் அவள் நெஞ்சு உலர்ந்தது. அவள் வேறொரு முடிவுடன், 'பாதுஷா உமது பேச்சை நம்பமாட்டார். ஆனால் என் வார்த்தையை என்னவோ கட்டாயம் நம்புவார்! நான் அவரிடம் சென்று, "அரசர்பெரும! நம்பிக்கையுள்ள தங்கள் சேனாபதி வழியில் என் கண்ணியத்தைக் குலைக்க முயற்சித்தார்!'' என்று சொல்லுகிறேன்' என்றாள்.

ரஹமதின் முகம் உலர்ந்தது. சேனாபதி வேலை பார்த்து அவன் தலை நரைத்துவிட்டது. அவன் தயங்கவில்லை. 'நடக்காது! நானே இறப்பேன்! தாங்கள் இவ்வளவு பெரிய பொய்யை - இவ்வளவு பெரிய களங்கத்தை இந்த நரைத்த தலையின்மேல் சுமத்தினால், நான் தங்கள் சந்தோஷத்திற்காக உயிரை விடுவேன்! ஆனால் பூவுலகப் பாதுஷாக்களுக்கு மேல் வேறொரு பாதுஷா இருக்கிறார். அவர் யோசித்துக்கொள்வார். எப்படியும் நரகத்திற்குப் போக வேண்டி ஏற்படாது!' என்றான்.

நட்பு, பயம், நயம் யாவும் வீணாகிவிட்டன. கிழ ரஹமத் கான் முன் மேஹர்-உன்னிஸா தோற்றாள். ஆஹா!

இப்பொழுது இன்னும் வேறு உபாயம் ஒன்றும் இல்லையா? என்ன ஆகும்?

சில நிமிஷம் யோசனை செய்துவிட்டு, மேஹர் கண்ணியமான குரலில், 'சேனுபதி! சாமானியமான தீனர்களாகிய நீங்கள் ஆக்ஞாபத்திர மில்லாமல் என் வீட்டுக்குள் எப்படி வந்தீர்கள்? நான் சக்கரவர்த்தினி யாகப்போகிறேன்! எனக்கு உத்தரவு எங்கே?' என்றுள்.

ரஹமத் கானின் முகமண்டலத்தில் மீண்டும் கவலையின் ரேகைகள் படர்ந்தன. ஜஹாங்கீர் பாதுஷா மேஹரின் பெயருக்கு அழைப்பு அனுப்பத் தைரியம் கொள்ளவில்லை. ஆனுல் ஓர் உத்தரவு வந்திருந்தது. அது காதலர் ஒருவருக் கொருவர் எழுதியது போலில்லை. சேனுபதிக்குத்தான் அந்த உத்தரவு. அவளுக்கு இல்லை! 'மரியாதையுடன் ஷேர் ஆப்கனின் மனைவியை அழைத்து வரவேண்டியது' என்றுதான் அதில் எழுதியிருந்தது.

ரஹமத் கான் தன் அங்கிக்குள்ளிருந்து ஒரு சிவப்புக் காகிதத்தை எடுத்து மேஹர் கையில் கொடுத்தான். மேஹர் படித்துவிட்டு, அதை வீசியெறிந்தாள். அது பறந்து தாமோதர நதியில் போய் விழுந்தது. அவள் ஒரு கடும் சிரிப்புடன் ரஹமதைப் பார்த்து, 'இது உமக்கு வந்த உத்தரவல்லவா? எனக்கு அழைப்புக் கடிதம் வரும் வரை நான் ராஜதானிக்கு வர முடியாது!' என்றுள்.

ரஹமத் கான் யோசித்தான். பேகம் சாஹிபா ஒரு கால் தக்க காரணத்துடன் காலம் கடத்தலாம். இந்தத் தடவை ரஹமத், அந்தப் பெண்மணியிடம் தோற்றுன். அவன் வெளிப்படையாக, 'தாங்கள் என்ன உத்தரவிடுகிறீர்களோ, அப்படியே நடக்கும்! இப்பொழுதே செய்தி அனுப்புகிறேன். இப்பொழுது தாங்கள் அந்தப்புரம் செல்லுங்கள். இந்த ஏழையின் செய்கைக்கு மன்னித்துக் கொள்

ளுங்கள். மாளிகையில் பிரவேசித்துத் தாங்கள் எதைக் காணப் போகிறீர்களோ, அதனல் தங்களுக்கு ஆச்சரியம் ஏற்படாது. தங்கள் மாளிகையைப் பெண் காவலர்களைக் கொண்டு நான் காத்து வருகிறேன்!' என்ருன்.

மேஹர் தாற்காலிகமாகத் திரும்பினுள். கிழவன் மகா புத்திசாலி என்று அவள் மனம் எண்ணியது; சகியை அழைத்து, 'மர்ஜானு, கடைசியில் உன் வார்த்தைதான் பலித்தது!' என்ருள்.



1180

மூன்றாம் அத்தியாயம்

மாளிகையில் பிரவேசித்ததும் மேஹர்-உன்னிஸா ஆச்சரியத்தில் மூழ்கினாள். அந்த இரவில் அந்த மாளிகையைத் தீவர்த்தி ஏந்திய காவல் பெண்கள் நாற்புறமும் காவல் புரிவதைக் கண்டாள். அவர்கள் பெண்களாக இருந்தாலும், கையில் கூரிய வாள்கள் ஏந்தி, புருஷர் போலச் சுற்றிக்கொண்டிருந்தனர். டில்லி பாதுஷாவைவிட இந்தக் கிழ சேனாபதி அதிகப் புத்திசாலி என்பதை அவள் உணர்ந்தாள்.

இந்த விதமாக இரவு கழிந்தது. விண் மீன்கள் மறைந்தன. காலை இளங்காற்றில் தாமோதர நதியின் சஞ்சல ஹிருதயம் சாந்த பாவம் கொண்டது. தோட்டத்தில் மலரும் புஷ்பங்களின் மணத்தை வாரிக்கொண்டு வீசியது காலைக் காற்று. இரண்டொரு பக்ஷிகள் விழித்தெழுந்து, தம் இனிய குரலால் பள்ளியெழுச்சி பாடிக்கொண்டிருந்தன. மேஹர் படுக்கையில் படுத்திருந்தாள். ஆனால் தூக்கமில்லை. கனவும் நினைவும் சேர்ந்து அவள் மூளையைக் குழப்பிக்கொண்டிருந்தன.

காலைக் கடன்களை முடித்துக்கொண்டு முதன் முதலில் மர்ஜானாவைக் கூப்பிட்டாள் மேஹர்.

மர்ஜானா வாடிய முகத்துடன் எதிரே வந்து நின்றாள். முந்தின இரவு நடந்த சம்பவங்கள் அவளுக்கு ஒரு கனவு போல் தோன்றின. அதன் பின் மாளிகையின் நாற்புறத்திலும் ஈரானிய ஸ்திரீகளின் கோர ரூபத்தையும், அவர்களுடைய வாளாயுதங்களையும் கண்டு, அவள் தலை சுற்றியது. அங்கே இருப்பதைவிட தப்பிக் குதித்து ஓடிவிடுவதே மேல் என்று கூட அவள் மனம் எண்ணியது. சற்று முன்பே

சென்றிருந்தால் இந்தச் சம்பவங்க ளெல்லாம் நிகழ்ந்திருக்க மாட்டா. அவள் சோகமான முகத்துடன், 'பீபீ! என்ன உத்தரவு?' என்று கேட்டாள்.

'ஒரு காரியம் செய்யவேண்டும்! ஒரு பல்லக்கில் ஏறி காட்வாருக்குச் சென்று வா!'

'தேவி கல்யாணியிடமா? ஆனால் இந்த ஈரானிய ஸ்திரீ களின் காவலில் அவர்கள் எப்படி வருவார்கள்?'

'அந்தப் பொறுப்பு எனக்கு. இந்தா, இந்தப் பத்து மோகராக்களையும் வாங்கிக்கொள். இது உன் செலவுக்கும் சிரமத்திற்கும் இனமாக இருக்கட்டும்!' என்றாள்.

மர்ஜானா சென்றாள். கல்யாணி ராஜா கஜபதி சிம்ம னின் மனைவி. ராஜா ஸாஹப் காட்வாரின் ஒரு கோட்டைத் தலைவன். முகல் பாதுஷாவின் உப்பைத் தின்பவன். கல்யாணி மேஹரின் பிரியமான தோழி. இந்த ஆபத்துக் காலத்தில் அவளுடன் ஆலோசனை செய்வது மிக்க அவசியம் என்று எண்ணினாள் மேஹர்.

மேஹர்-உன்னிஸா மெல்ல மணியை அடித்தாள். மணிச் சத்தம் மறையுமுன் ஒரு காவல்காரி வந்து அவளுக்கு ஸலாம் செய்து, 'பேகம் ஸாஹிபா, என்ன உத்தரவு?' என்று கேட்டு நின்றாள்.

இந்த வேடிக்கையைப் பார்த்து மேஹரின் வாடிய முகத்தில் சிரிப்பின் களை தட்டியது. அவள் மனத்திற்குள் இந்த வேடிக்கை அப்படி ஒன்றும் கெட்டதன்று என எண்ணினாள்.

மேஹர் கம்பீரமான குரலில், 'நீ தாதி என்று தெரி கிறது. ஒரு நாள் டில்லியில் நீ எனக்குக் கீழே கட்டுப்பட் டவளாக இருக்கவேண்டி வரும்!' என்றாள்.

'உத்தரவு! தங்கள் சேவைக்காகவே நாங்கள் நியமிக் கப்பட்டிருக்கிறோம்!'

'சரி, போய் ஸர்தார் ரஹமத் கானிடம் என் ஸலாம் தெரிவி!'

'ஜனுப்! அவர் ஏதோ வேலையாய் வெளியே சென்றிருக்கிருர். இந்தச் சமயம் அவருடைய பதவியில் ருஸ்தும் கான் இருக்கிருர். இரண்டு மூன்று நாள்வரை அவர் திரும்ப மாட்டார்.'

'ஆனல் ருஸ்தும்கானிடம் என் உத்தரவைத் தெரிவி!'

உத்தரவு கிடைத்ததும் ருஸ்தும்கான் வந்து நின்ருன். ருஸ்தும் அப்பொழுதுதான் யௌவனத்தில் காலெடுத்து வைத்துக்கொண்டிருந்தான். நல்ல கட்டுமஸ்தான புருஷன். யௌவனத்தினல் பூரித்திருந்தான்.

ருஸ்தும்கூட ரஹமத் கானைப் போல் வயதான போர்வீரனுக இருப்பான் என்று எண்ணியிருந்தாள் மேஹர். அந்த எதிரே வந்து நின்றதும் முதலில் அவனுடன் பேச அவள் பிரியப்படவில்லை. ஆனல் தலைக்குமேல் ஆபத்து வந்துள்ள போது எல்லாம் செய்யவேண்டித்தானே ஏற்படுகிறது. ஆகையால் மேஹர் தனது முகத்திரையை விலக்கி அந்த அழகிய வாலிபனின் பக்கம் பார்த்து, 'ருஸ்தும் அலி!' என்ருள்.

ஸப்த' ஸ்வர வீணையின் நரம்புகளில் யாரோ விரல்களால் தட்டினர்கள். அதன் மதுர ஸ்வரம் ருஸ்தும் அலியின் செவிகளில் புகுந்து உயிரைச் சூழ்ந்து இனிமையாகச் சப்திக்கலாயிற்று. அந்த முக்காட்டிற்குள் கண்ட மைதீட்டிய இரு கருவிழிகளும், அந்தச் சந்திர விம்பம் போன்ற முகமும் ருஸ்தும் அலியின் தலையைக் கிறுகிறுக்கச் செய்துவிட்டன. முதல் நாள் இரவு தீவர்த்தியின் ஒளியில் நதிக்கரையில் கண்ட அந்த ஈடில்லாத எழில் உருவம் அன்று அவன் முன் இன்னும் பன்மடங்கு சோபையுடன் பிரகாசித்தது. 'ஆஹா! ரமணிகள் இவ்வளவு சுந்தரிகளாகக்கூட இருக்கி

றார்களா ?' என்று வியந்து, ருஸ்தும் நடுநடுங்கின குரலில், 'என்னை ஏன் அழைத்தீர்கள் ?' என்றான்.

'நேற்று ரஹமத்கானுடன், நீ நதிக்கரை மணலில் எங்களைச் சந்தித்தா யல்லவா ?'

'ஆமாம் !'

'உங்கள் ஏற்பாட்டினால் நான் கைதியாகி யிருக்கிறேன். உங்கள் காவல்காரிகளின் காரணமாக என்னுடைய பந்து மித்திரர்கள் வந்து போகும் மார்க்கம் அடைபட்டிருக்கிறது. கண்ணியமுள்ள ஸ்திரீகள் இங்கு எப்படி வருவார்கள் ? நான் டில்லி செல்கிறேன், செல்வதற்கு முன் எல்லோரையும் சந்திக்க வேண்டாமா ?' என்றாள் மேஹர்.

ருஸ்துமின் உயிரில், அவன் ஹிருதயக் குகையில், மேஹரின் மோகன ரூபம் வட்டமிட்டுக்கொண்டிருந்தது. அவன் தழுதழுத்த குரலில், 'என்ன செய்ய வேண்டும் ? சொல்லுங்களேன் !' என்றான்.

'எந்தக் காவல்காரியும் பல்லக்குகளைச் சோதனை செய்யக் கூடாதென்று ஏற்பாடு செய்துவிடு !'

'முடியாத விஷயம் !'

மேஹர் முகத்தின் மேலிருந்த முக்காட்டை விலக்கினாள். மேகத் திரை விலகிக் கிளம்பிய பூர்ண சந்திரன் போல் விளங்கியது அந்த முகம். கோபத்தால் அவள் முகம் ஜ்வலித்தது. நாணம், வெட்கம் எல்லாம் பறந்தது.

'முடியாதா ? டில்லி பாதுஷா உங்களுக்கு இந்த மாதிரி உத்தரவிட்டிருக்கிறாரா ?' என்றாள் ரோஷத்துடன்.

'இல்லை ! பாதுஷா ஒன்றும் சொல்லவில்லை. இது எங்கள் யுக்தானுசாரப்படி நாங்கள் செய்துகொள்ளும் நிர்ணயங்கள் !'

ருஸ்தும் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை. அவனுக்கு மயிர்க்கூச் செறிந்தது. இந்தப் பரந்த உலகின் ஒவ்

வோர் இடத்திலும் அவளுடைய சௌந்தரியத்தையே கண்டான்.

மேஹர் அவனுடைய மனோபாவத்தை அறிந்து கொண்டாள். வெட்கத்தால் முக்காட்டை மூடிக்கொண்டு, 'ருஸ்தும் அலி! காட்வாரிலிருந்து என் தோழி தேவி கல்யாணி — கஜபதி சிம்மனின் மனைவி — வருகிறாள்! அவளுடைய பல்லக்கை யாரும் சோதனை செய்ய வேண்டாம் என்று கட்டளையிடு!' என்றாள்.

'என்னை மன்னியுங்கள், பீபி ஸாஹிபா! இந்தச் சமயம் நான் ஒன்றும் பதில் கூற முடியாது! ராணி நாளைக்குத் தானே வரப்போகிறாள்! இன்று மாலைக்கு முன்பே நான் இதற்குப் பதில் அளிக்கிறேன். எனக்கு ஒரு முறை தகவல் அறிவியுங்கள்!' என்று கூறி ருஸ்தும் ஸலாம் செய்து சென்றான்.

அவன் கண்களுக்கு நாற்புறமும் அந்த மோகினியின் உருவமே தோன்றியது. எதிரேயுள்ள நந்தவனத்தில் மலர்ந்திருந்த மல்லிகை மலர்கள் அவள் ரூபத்தையும் மேன்மையையும் எப்படிக் கவர்ந்தன? வானத்தில் பறந்து திரியும் குயில்கள் அவளுடைய குரலோசையை எப்படித் திருடிக் கொண்டன? எவ்வளவு அழகான நேத்திரங்கள்! எவ்வளவு இனிமையான குரல்! அழகான புருவங்கள்! என்ன நேர்த்தியான வர்ணம்! டில்லி அதிபதியின் யௌவன சேனாபதி அவளுடைய ரூப மோகத்தில் வீழ்ந்தான்! நம்பிக்கையையும், கடமையையும் மறந்தான்! ஆசைப் பேய்க்கு அடிமையானான்!

ருஸ்தும் அலி மாலையை எதிர்பார்க்கலானான். காலம் தான் எவ்வளவு நீண்டு விடுகிறது! மணி நேரம் யுகம் போல் ஆகிவிடுகிறது! அவன் மனத்தில் ஒரு நடக்கக் கூடாத கற்பனை உதயமாயிற்று. வானத்தில் உதிக்கும் சூரியன் தன்

அறைக்குள் ஏன் வரக்கூடாது? அவன் துராசை மதம் கொண்டான். எப்படி, எந்தத் தைரியத்துடன் அவன் வாய் திறப்பது? இல்லை! ஒன்றும் சொல்ல வேண்டிய தில்லை! ஹாஹா! உபாயம்தான் என்ன? பின் ஹிருதயத்தில் அணையாத ஜ்வாலையை வைத்துக்கொண்டு அபாக்கிய வானன ருஸ்தும் அலி சிறிது சிறிதாகப் பஸ்மமாவதா?

சாயங்காலம் அழைப்பு வந்ததும் ருஸ்தும் மீண்டும் வந்து நின்றான். ஒரு தனி அறையில் ஒரு சோபாவில் கவலையுடன் அமர்ந்திருந்தாள் மேஹர்-உன்னிஸா. அதே பழைய சௌந்தரிய பாவத்தோடு, முகத்தை அரை முக்காடு போட்டு மூடிக்கொண்டிருந்தாள். அந்த மறைவுக்குள் தான் மன்மதனின் பாணம் - தீக்ஷண்யமான விஷ பாணம் - இருந்தது. வண்டு போன்ற கருமை கொண்ட கூந்தல் முகத்தைச் சுற்றி வழிந்து சரிந்து மென்காற்றில் அசைந்துகொண்டிருந்தது. ருஸ்தும் முன்னே சென்று ஸலாம் செய்தான்.

'என்ன யோசனை செய்தாய், ருஸ்தும் அலி?' என்றாள் மேஹர்.

அந்தப் பாவி யாதொரு பதிலும் கூறவில்லை. அவன் என்ன அப்படி யோசிக்கலானான்? அவன் அறையின் நாற்புறமும் ஒரு முறை பார்த்தான். அங்கே வேறு யாரும் இல்லை. ஆயினும் அவனுக்குத் தைரியம் ஏற்படவில்லை. மனத்திலுள்ள வார்த்தை நாவில் வரவில்லை. சக்தியற்று உள்ளேயே சென்றது!

மேஹர்-உன்னிஸா அலட்சியத்துடன், 'இவ்வளவு பெரிய டில்லி பாதுஷாவின் சேனாதிபதியாக இருந்தும், ஒரு வார்த்தைக்குப் பதில் சொல்ல இரண்டு மணி நேரம் செலவு செய்கிறாயே?' என்றாள்.

'கடைசி விஷயத்தை யோசித்துவிட்டேன்! தங்களை விடுதலை செய்துவிடுகிறேன்! நேற்று இரவு நதிக்கரையில்

ரஹமத்கானிடம் உரைத்த யாவற்றையும் நான் கேட்டேன்! அவனுல் எது செய்ய முடியவில்லையோ அதை நான் செய்வேன்!' என்ருன்.

மேஹர்-உன்னிஸா நடுங்கினுள்! 'யாருடைய உத்தரவினுல் என்னை விடுவிப்பாய்?' என்ருள்.

ருஸ்தும் மெள்ள, 'நான், என்னுடைய இஷ்டத்தின் மேல்!' என்ருன்.

'நீ, உன் இஷ்டத்தின் மேலா? அதற்கென்ன ஊதியம் பெற விரும்புகிருய்?'

ருஸ்தும் மனத்திற்குள் 'நான் எதை விரும்புகிறேனே அதன் முன் இந்த உலகமே ஈடல்லவே!' என்று சொல்லிக் கொண்டு, வெளிப்படையாக, 'இதற்கு ஊதியம் என்ன? அவ்வளவுதான்! உயிர்தான்!' என்ருன்.

'எனக்காக நீ ஏன் இறக்கிருய்?'

ருஸ்தும் நடுங்கும் குரலில் ஆவேசத்துடன், 'நான் திரும்ப மாட்டேன்! தங்களைத் தொடர்வேன்! தங்கள் அனுக்கிரகத்தின் மேல்தான் என் வாழ்க்கையின் எதிர் காலம் இருக்கிறது. தங்களைப் பார்க்காமலிருந்திருந்தால் ஒருகால் நான் ஜீவித்திருப்பேன்!' என்ருன்.

மேஹர் உடனே யாவற்றையும் அறிந்தாள். அவள் முகம் கோபத்தால் சிவந்தது. அவள் பெண் சிம்மத்தைப் போல் கர்ஜிக்கலானுள். 'பாபி! துராத்மா! இவ்வளவு துணிச்சலா உனக்கு?' மணியின் கயிற்றை வேகமாக அசைத்தாள் மேஹர்.

ருஸ்தும் ஆபத்தில் சிக்கிக்கொண்டான். அபகீர்த்தி, சிறைவாசம், மரண தண்டனை — யாவும் அவன் கண்முன் தாண்டவமாடின. அவனுக்கு மரண பயம் உண்டாயிற்று. அவன் மேஹரின் கால்களில் விழுந்து, 'மன்னியுங்கள்! இந்த மானக்கேட்டை யாரிடமும் கூருதீர்கள்! இதனுல்

இருவருக்கும் களங்க முண்டாகும்! இப்பொழுது நான் கடைசி முறையாக விடை பெற்றுக்கொள்கிறேன்! நான் மரணத்துக்குப் பயப்படவில்லை! நான் வெறியன்! இன்றேல் இந்தக் கெட்ட எண்ணத்தை ஏன் கொள்கிறேன்? என் போன்ற அபாக்கியவான்களைக் கொல்லுவதால் என்ன லாபம் ஏற்படப் போகிறது?' என்று வேண்டினன்.

மேஹர் நடுங்கும் குரலில், 'பிசாசே ! தூர விலகு!' என்ருள்.

ருஸ்தும் ஸலாம் செய்யவில்லை. என்ன செய்ய வேண்டும் என்பதை யோசிக்கக்கூட இல்லை. அவன் யாவற்றையும் மறந்தான். மாளிகையை விட்டு வெளியேறி விரைவாகத் தன் கூடாரத்திற்கு வந்து சேர்ந்தான். அந்தச் சமயம் இருட்டிவிட்டது. ருஸ்துமின் முகம் சவக் களை தட்டி யிருந்தது. கூடாரத்தினுள் நுழைந்ததும், அங்கே விருத்த ரஹமத்கான் ஏதோ யோசித்துக்கொண்டு இருப்பதைக் கண்டான்.

ரஹமத்கான் சட்டென்று, 'ருஸ்தும், எங்கே சென்றிருந்தாய்?' என்ருன்.

அந்தச் சத்தத்தைக் கேட்டு ருஸ்துமின் குற்றம் செய்த ஹிருதயம் நடுங்கியது. அவன், 'பேகம் ஸாஹிபா என்னைக் கூப்பிட்டனுப்பினர்கள்!' என்ருன்.

'ஏன்?'

'யாத்திரிகர்களின் பல்லக்கு எது வந்தாலும் அதைச் சோதனை செய்ய வேண்டாம் என்று சொன்ஞர்கள்!'

'நீ என்ன பதிலளித்தாய்?'


'ஒன்றுமில்லை!'

ரஹமத் கர்ஜித்தான். கோபத்தில் அந்த விருத்தனின் மனம் வாலிபனின் உள்ளத்தை உணர்ந்தது. அவன் கோபத்துடன், 'நம்பிக்கைத் துரோகி! நீ டில்லி அதிபரின்

சேனுபதியல்ல! நான் சகல விஷயங்களையும் கேட்டேன்! மூடா! இன்றைய தினத்திலிருந்து நீ பதவியிலிருந்து விலக்கப்பட்டாய்! கைதியாஞய்!' என்ருன்.

ருஸ்தும் மறு பதில் இன்றி மௌனமாக நின்ருன். அவன் பதிலற்று நிற்பதே அவனுடைய குற்றத்திற்கு ஸ்பஷ்டமான பிரமாணமாக இருந்தது.

பிரதான சேனுபதியின் கட்டளைப்படி ஷேக் ருஸ்தும் கான் தற்காலிகமாகக் கைதுசெய்யப்பட்டான். பாபத்தைக் கற்பனை செய்ததாலேயே அவன் வீழ்ச்சி யடைந்தான்!



நான்காம் அத்தியாயம்

திறந்த ஜன்னலின் ஓரம் நின்றுகொண்டு மேஹர்-உன்னிஸா ஸந்தியா கால ஆகாயத்தின் ஸௌந்தரியத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். விருக்ஷங்களின் இலைகளின் மேல் படிந்த அஸ்தமன சூரியனின் பொன் ஒளி மெள்ள மெள்ள மங்கியது. பக்ஷிகள் நீல வானில் அதிவேகமாகப் பறந்து தம் கூண்டுகளுக்குச் சென்றுகொண்டிருந்தன. கலகல வென்று சத்தமிட்டு அவை மேகத்தைப் பிளந்துகொண்டு ஊடுருவிப் பறந்து சென்றன; ஆயினும் அவற்றால் வானத்தை எட்டிப் பிடிக்க முடியவில்லை. மேஹர் இந்தக் காட்சிகளை மெய்மறந்து பார்த்துக்கொண்டிருந்தாள். அதற்குள் யாரோ 'மேஹர்ஜான்!' என்று அழைப்பது கேட்டது.

மேஹர் திடுக்கிட்டுத் திரும்பினாள். 'மேஹர்ஜான்!' இது ஷேர் ஸாஹப் கூப்பிடும் அருமை யழைப்பு! இறந்த மனிதர் சமாதியினின்று எழுந்துவந்து மீண்டும் இம்மாதிரி கூப்பிட முடியுமா? மேஹர் பின்னால் திரும்பிப் பார்த்தாள்! தேவி கல்யாணி நின்றுகொண்டிருந்தாள்.

கல்யாணி பார்த்தாள். மேஹர்-உன்னிஸாவின் மோகன ஸௌந்தரியம் வாடியிருந்தது. விரிந்து கிடந்த தலை மயிர் முகத்தை வந்து கவிந்துகொண்டிருந்தது. சதா புன்சிரிப்புத் தவழும் அவள் அதரங்கள் உலர்ந்து வெறிச்சென்று அடிக்கடி நடுங்கிக்கொண்டிருந்தன.

மேஹர் ஓடி வந்து கல்யாணியை மார்புடன் தழுவிக் கொண்டாள். தேம்பித் தேம்பி அழலானாள். அவள் உள்ளே கிடந்த துக்கம் வர்ஷா காலத்து நதி போல் பெருகியது. கல்யாணி தடைபடும் குரலில், 'விஷயம் இவ்வளவு மிஞ்சி விட்டதா? ஏன் எனக்குச் செய்தி யனுப்பவில்லை?' என்றாள்.

இதற்குப் பதில் இல்லை. கண்ணீர்ப் பெருக்கு அவள் வக்ஷ ஸ்தலத்தை நனைத்தது. மழை காலத்துத் தண்ணீரில் மிதக்கும் ரோஜா மலர் போல இருந்தது அவள் முகம்.

கல்யாணி தேற்றும் குரலில், 'ஆகவேண்டியது ஆகி விட்டது! அது இனித் திரும்பி வரப்போவதில்லை! அதற் காக ஏன் இப்படி வருந்துகிறாய்?' என்றாள்.

மேஹர்-உன்னிஸா கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, 'கல்யாணி! என் கல்யாணி! நான் பெரும் ஆபத்தில் சிக்கி யிருக்கிறேன்! என்னை ஆக்ராவுக்கு அழைத்துச் செல்ல பாதுஷாவின் சைனியம் என் வீட்டைச் சூழ்ந்திருக்கிறது!' என்றாள்.

கல்யாணி இதைக் கேட்டு ஆச்சரிய மடையவில்லை. இந்த விஷயங்கள் யாவற்றையும் அவள் முதலிலேயே தன் கணவன் ராஜா கஜபதி சிம்மன் மூலம் கேட்டிருந்தாள். ஆகையால் அவள், 'வேறு உபாயம் ஒன்றும் இல்லாத போது ஆக்ரா செல்லாமல் எப்படி முடியும்?' என்றாள்.

'வழியிலேயே பட்டினி கிடந்து சாவதாகப் பிர திக்ஞை செய்திருக்கிறேன்! அந்தக் கொடிய ஹிருதய முள்ள பாதுஷாவின் சிற்றின்ப வஸ்துவாக ஆகமாட் டேன்!'

'சிற்றின்ப வஸ்து என்ன? டில்லியின் ரத்தின சிம்மா தனத்திற்கு நீ பட்டத்து ராணியாவாய்! ஒரு நாள் இந்தப் பாரதவர்ஷம் உன் பார்வையால் நடுங்கும்!'

'இல்லை, தோழி! நீ அந்த வார்த்தையே சொல்லாதே! நீயும் கொடியவளாகாதே! ஆலோசனை செய்வதற்காக உன் னைக் கூப்பிட்டிருக்கிறேன் - தோழியைப் போல - சகோ தரியைப் போல - நீ எனக்கு யோசனை கூறு!'

'நான் ஹிந்து வீட்டில் பிறந்தேன். அதிர்ஷ்டத் தைப் பெரிதும் நம்புகிறேன். உனக்கு ஏற்பட்டிருக்கும்

கஷ்டங்க ளெல்லாம் அதிர்ஷ்டத்தின் அறிகுறிகள்தான். அதைத் தவிர இன்னொரு விஷயம் இருக்கிறது! அதிர்ஷ்டம் மாத்திரம் என்ன? இந்தத் தோஷங்களெல்லாம் அந்தக் கிழவர் அக்பர் பாதுஷாவினுடையவை! அவர் குறுக்கே நின்றிராவிட்டால் நீ குமார் ஸலீமின் வாழ்க்கைத் துணையாகியிருப்பாய். நீ டில்லிச் சிம்மாதனத்தில் அமர்ந்திருப்பாய்! அதிர்ஷ்டத்தில் எழுதியிருக்கிறது. அதை யார் அழிக்க முடியும்?' என்றாள் கல்யாணி.

மேஹர் ரோஷத்துடன், 'நானே அதிர்ஷ்டத்தின் காரியத்திற்குத் தடை செய்கிறேன்! என் நாதன் ஸ்வர்க்கத்தில் இருக்கிறார். அவருடைய அன்பின் சின்னம் என் ஹிருதயத்திலிருந்து அழிய முடியாது! அன்பற்றவனும், கொடிய உள்ளமுள்ளவனும், விலாசப் பிரியனுமான அந்தப் பாதுஷாவின் கைப்பொம்மை யாகமாட்டேன்!' என்றாள்.

'இதென்ன பிரதிக்ஞை? எதற்காக இதெல்லாம்?'

'என் இஷ்டம்! பிரதிக்ஞை இஷ்டத்தின் ஆதீனம் தானே! இஷ்டம் எந்த வழியில் போகிறதோ, பிரதிக்ஞையும் அந்த வழியில்தான் போகும்! ஆயினும் ஸ்திரீகளின் ஹிருதயம் ரொம்பத் துர்ப்பலமுடையது!'

கல்யாணி ஒரு கேலிச் சிரிப்புச் சிரித்துவிட்டு, 'உனக்காக இவ்வளவு ஏற்பாடு செய்திருப்பவருக்கு, ஒரு முறை உன் முகத்தைக்கூடக் காட்ட மாட்டாயா? எப்பொழுது பாதுஷாவின் சைனியம் வந்ததோ நீ சென்றே தீரவேண்டும்! நீ என் வீட்டுக்கு வந்தாயானால், அவர் அங்கும் உன்னை மரியாதையுடன் அழைத்துப் போக வருவார்! அப்பொழுது என்ன உபாயம் செய்வாய்? டில்லி அதிபதியின் ஆதரவை நீ உபேக்ஷை செய்கிறாயா?' என்றாள்.

'முடியுமானால் அவன் மார்பில் என் கால்களால் உதைப்பேன். பிறகு, "நீ உலகத்திற்குப் பாதுஷாதான்; ஆயினும்

இவ்வளவு வெறுக்கப்பட்டவன். நீ மோகத்தின் வசப்பட்டு, உன் சுகத்திற்காகக் கதியற்ற அபலையை ஏன் நாசம் செய்கிறாய்?'' என்று கேட்பேன்' என்றாள்.

'ஸகி! இனி ஒருதரம் இதை நாவினாலும் உரையாதே! இந்தச் சுவர்களுக்குக் கூடக் காதிருக்கிறது! நாற்புறமும் பாதுஷாவின் மனிதர்கள் இருக்கிறார்கள்! யார் கேட்டுக் கொண்டிருந்து என்ன சர்வ நாசத்தை விளைவிப்பார்களோ, யார் கண்டது?' என்றாள் கல்யாணி.

சட்டென்று கதவின் மறைவிலிருந்து யாரோ, 'காலால் உதைபடும் பயம் ஒரு பெரிய பயமும் இல்லை. ஜஹாங்கீர் பாதுஷா வெகு நாட்களாக அந்தப் பாதங்களுக்குத் தாஸனாகி யிருக்கிறார்!' என்று கூறினர்.

இந்த வார்த்தையால் மேஹரும் கல்யாணியும் திடுக்கிட்டுப் போயினர். அதே சமயம் ஒரு ஸ்திரீ அந்த அறைக்குள் பிரவேசித்தாள்.



ஐந்தாம் அத்தியாயம்

உள்ளே பிரவேசித்த ஸ்திரீ யுவதியாகவும் அத்தியந்த சுந்தரியாகவும் இருந்தாள். உடையைப் பார்த்தால் அவள் தாதியைப் போல் காணப்பட்டாள். ஆனால் அவள் ரூபத்தைப் பார்த்தால் அவள் ராணிகளையும் தோற்கச் செய்பவள் போல் தோன்றினாள். கல்யாணி ஆச்சரியத்துடன், 'நீ யார்?' என்றாள்.

'நான் ஒரு தாதி!'

'யாருடைய தாதி!'

'பியாரி பேகத்தின் தாதி!'

'சிறிது காலத்துக்கு முன் ஈரானிலிருந்து வந்திருக்கும் அந்த டில்லிப் பியாரி பேகமா?'

'ஆமாம்!'

'நீ இங்கே எப்படி வந்தாய்?'

'பேகம் என்னைப் போகச் சொல்லிவிட்டாள். என் சித்தப்பா வங்காளத்தில் இருக்கிறார். நான் அவரிடம் செல்லுகிறேன். ஷேர் ஸாஹப்பின் பத்தினி டில்லி செல்லப் போகிறாள் என்று கேள்விப்பட்டேன். ஒருகால் அவளிடம் ஏதாவது வேலை கிடைக்குமென்ற உத்தேசத்துடன் வந்தேன்!' என்றாள்.

இந்த வார்த்தைகள் கல்யாணியின் ஆச்சரியத்தையும் சந்தேகத்தையும் குறைத்தன. அவள் மீண்டும் அவளிடம், 'உன் வேலை எப்படிப் போயிற்று?' என்று கேட்டாள்.

'அடேயப்பா! பேகம் ஸாஹிபாவின் அந்தப்புரத்தின் வேலை யென்றால் அதைப் பற்றி என்ன கூறுவேன்? வெற்றிலையில் சற்று சுண்ணாம்பு அதிகமாகிவிட்டாலும் சர்வநாசம்தான்!'

கல்யாணி மேஹர் இருவரும் இதை நம்பிவிட்டனர். கல்யாணி பயந்த குரலில், 'நாங்கள் சற்றுமுன் பேசிக்கொண் டிருந்ததை நீ அவசியம் கேட்டே யிருப்பாய்! சொல்லாமல் கொள்ளாமல் நீ இங்கு எப்படி வந்தாய்? "பாதுஷாவின் அந்தப்புரத்தி லிருந்தேன்" என்கிறாய்! மட்டு மரியாதை ஒன்றும் தெரியவில்லையே!' என்றாள்.

'என்னை மன்னியுங்கள்! பேகம் தனியாக இருக்கிறார் கள் என்று எண்ணிவிட்டேன்! எல்லாவற்றையும் ரகசிய மாக வைத்துக்கொள்கிறேன். அப்படி யெல்லாம் இல்லா விட்டால் ரங்கமஹலில் (பாதுஷாவின் அந்தப்புரம்) எப்படி இருக்க முடியும்? எங்களுக்கு இருபத்தி நாலு மணி நேரமும் உயிர்ப் பயம்தான்!' என்றாள் வந்தவள்.

கல்யாணி இதைக் கேட்டுச் சற்று ஆறுதலடைந்து, தன் இடுப்புப் பையிலிருந்து ஐந்து மோஹராக்களை எடுத்து அவள் கையில் வைத்து, 'ஜாக்கிரதை! நீ பேகத்தி னுடைய - எதிர்கால சுல்தானுவுடைய - விஷயத்தைப் பற்றி எதுவும் வெளியிடக் கூடாது! சொன்னால் உன் மரணம் எதி ரேயே இருக்கிறது! இந்தச் சமயம் ஆக்ரா செல்வது தடை பட்டிருக்கிறது! ஒரு வாரம் கழித்து வா! அந்தச் சமயம் உன்னை வேலைக்கு எடுத்துக்கொள்வார்கள்!' என்றாள்.

வந்தவள் ஸலாம் செய்து, 'பேகம் ஸாஹிபாவுக்கு ஜே!' என்று சொல்லிச் சென்றாள். கல்யாணியும் மேஹரும் அந்தப் பாபியின் கபடத்தை மறந்தார்கள். யாராவது விசேஷமாகக் கவனித்துப் பார்த்திருந்தால், அந்தத் தாதி யின் முகத்தில் ஓடும் ஒரு குடிலச் சிரிப்பின் ரேகையைக் கண்டிருப்பார்கள்.

அந்தத் தாதி மஹலிலிருந்து வெளிப்பட்டு கிராம வழியை நோக்கி நடந்து, ஒரு வாய்க்கால் அருகே இருந்த பல்லக்கில் ஏறி அமர்ந்தாள்.

தாதி சென்றதும், கல்யாணி மேஹரைப் பார்த்து, 'என்ன யோசித்தாய், தோழி?' என்றாள்.

'ஆக்ரா போக மாட்டேன். வழியிலேயே விஷம் குடிப்பேன்! என் கட்டை ஆக்ரா செல்லும். ஜஹாங்கீர் பாதுஷா தம் கீர்த்தியைக் காண்பார்!' என்றாள் மேஹர்.

கல்யாணி ஆதரவுடன், 'நீ இறப்பதால் பாதுஷாவுக்கு என்ன ஆகப்போகிறது? சீச்சி! அடிக்கடி இந்த வார்த்தையைக் கூறாதே! என் யோசனைப்படி நீ ஆக்ராவுக்குப் போ! அங்கே ஆதரவு கிடைத்தால் சிம்மாதனத்தில் அமரு! மரியாதை கிடைக்காவிட்டால் விஷத்தைக் குடிக்கலாம்! நானும் ராஜாவும் சீக்கிரம் அங்கு வரப்போகிறோம்! நானே என் கையால் விஷத்தை உன் வாயில் ஊட்டுகிறேன். அந்தச் சமயம் உன்னை யாரும் தடைசெய்ய மாட்டார்கள்' என்றாள்.

கல்யாணி ராணி சொல்வது சரியென்று பட்டது மேஹருக்கு.

'சகி! எங்கள் சாஸ்திரத்தில் ஜன்ம ஜன்மாந்தரங்களில் செய்த புண்ணியத்தால் மனிதப் பிறப்பு ஏற்படுகிறதென்று கூறியிருக்கிறது. மனிதனாயிருந்து, யார் மனிதரைப் போல் விவகாரம் செய்ய முடியுமோ அவர்களே மனிதர்கள்! அவர்களே தன்யர்கள்! மரணத்தினால் உன்னுடைய யாவும் நஷ்டமாகிவிடும். மலரை மண்ணோடு மண்ணாய்ச் சேர்ப்பதற்கு என்ன அவசியமிருக்கிறது? எத்தனை மலர்கள் தாமாக மலர்ந்து வேரூன்றுகின்றன. நீ இந்தப் பாரத வர்ஷத்தின் மஹாராணியாகி ஜனங்களுக்கு நன்மை செய்பவளாக ஆவாய்! தவிர, உங்கள் தர்ம சாஸ்திரங்களில் மறுமணம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதே! பாதுஷாவும் உன்னுடைய காதலர் அல்லவா?' என்றாள்.

இந்தப் பிரச்னையைப் பற்றிய தர்க்கம் இவ்விதமாக முடிந்தது. கல்யாணியின் புத்தி சாதுரியத்திற்கு முன்

மேஹரால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அவள் மனத்திற்குள், 'உபாயம்தான் நமது கையில் இருக்கிறது.. கல்யாணி தேவியின் யோசனைப்படி ஆக்ராவின் ரகசியத்தைத் தான் அறிந்து வருவோமே!' என்று எண்ணினுள்.

விடை பெற்றுக்கொள்ளும் சமயம் வந்தது. வெகு நாட்களுக்குப் பிறகு அந்தச் சந்திப்பு ஏற்பட்டது. பிறகு எப்பொழுது சந்திப்பு ஏற்படுமோ, யார் கண்டார்கள்? வர்ஷா காலத்துப் பெருக்கைப் போல மேஹரின் கண் மலர்கள் கண்ணீரைக் கொட்டின. கல்யாணி கண்ணீர் விடும் மேஹரைத் தன் மார்புடன் அணைத்து, 'சகி! நான் இங்கே எத்தனை தடவை வந்தாலும் அத்தனை தடவையும் நீ என்னைச் சிரித்த முகத்துடனேயே விடை கொடுத்தனுப்புவாய். இன்று உன் நிலைமையைக் கண்டு என் மனம் விண்டுவிடும் போல் இருக்கிறது. ஆசிர்வாதம் செய்கிறேன்! நீ சதா சுகமடைவாய்! இதைத் தவிர நான் ஒன்றும் கூற முடியாது!' என்ருள். துக்கத்தால் அவள் குரல் தடங்கல் கொண்டது.

கல்யாணி பல்லக்கில் சென்றமர்ந்தாள். மேஹர்-உன்னிஸா சிறிது தூரம்வரை கூடவே சென்ருள். திரும்பி வந்ததும், விருத்த சேனபதி ரஹமத்கானை அழைத்து, 'பாதுஷாவிடமிருந்து இரண்டாவது கட்டளைக்கு அவசியம் ஒன்றும் இல்லை! நாளைக் காலையில் ஆக்ரா செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்!' என்று கூறினுள்.

விருத்த ரஹமத்கான் அந்தச் செய்தியைக் கேட்டு ஆச்சரியமடைந்து போனுன்.

ஆறும் அத்தியாயம்

ஆக்ராவில் பாதுஷாவின் ரங்கமஹலின் வைபவங்களை வர்ணிக்க யாரால் முடியும்? ரங்கமஹல் எவ்வளவு பெரியது? அதில் குபேரன் ஐசுவரியத்திற் கொப்பான ஐசுவரியங்கள் எவ்வளவு இருக்கின்றன? வைரங்கள், நவரத்னங்கள்! எத்தனை கட்டழகிகள்! ரங்கமஹலைச் சித்திரிக்க, ரங்கமஹலை நிர்மாணம் செய்ய எத்தனை சிற்பிகளின் வாழ்நாள் செலவிடப்பட்டிருக்கும்? அதற்கு ஒரு கணக்குக்கூட உண்டா?

ரங்கமஹல் என்றால் ஒரே சுந்தரிகளின் கூட்டம்தான். இந்தச் சுந்தரிகளின் முக கமலத்தைச் சூரியன் காண முடியாது, ஆகாயம் காண முடியாது, இயற்கைகூடக் காண முடியாது. திறந்த ஜன்னல் வழியாகப் புஷ்ப வாசனையை ஏந்தி வரும் காற்று மாத்திரம் உள்ளே சென்று, இந்தச் சுந்தரிகளின் அளகபாரத்துடன் விளையாடி வரும். இவர்களுடைய சுகந்தத்தை முகர்ந்து வந்து தோட்டத்திலுள்ள மலர்களில் விட்டுவிடும். பிறகு அவைகளினின்றும் அதைத் திருடிக் கொண்டு ஓடிவிடும்.

குளோப்புகளுக்குப் பக்கத்தில் குளோப்புகள் தொங்கின. நிலைக் கண்ணாடியுடன் நிலைக்கண்ணாடிகள். புஷ்ப மாலைகளால் கட்டிய ஜாலர்களின் மத்தியில் முத்து, ரத்னம், நீலம் முதலியவைகள் இழைத்த கொடிகள்! அதன் ஒவ்வொரு மூலையிலும் ஹாபிஸின் காதற் கவிதை, பர்டோஸியின் வீரக் கவிதை, குலிஸ்தானின் உபதேச மொழிகள்—இவை வரையப்பட்டிருந்தன. ஸ்வர்ணப் பாத்திரங்களில் நாக கேசரம் (ஒரு வகை உயர்ந்த மருந்துச் செடி) வைக்கப்பட்டிருந்தது. வெள்ளித் தொட்டிகளில் ரோஜாச் செடிகள்

வைக்கப்பட்டிருந்தன. ஒரு ஸ்தம்பத்திற்கும் மறு ஸ்தம்பத்திற்கும் மத்தியில் அசைந்தாடும் மலர்க் கொடிகள் இருந்தன. சிற்சில இடங்களில் தங்கத்தினுல் செய்யப்பட்ட சிம்மத்தின் வாயினின்றும் நீர்த் தாரைகள் பெருகிக்கொண்டிருந்தன.

ஒரு புறம் மான்கள், மயில்கள்! குயில்கள், பஞ்ச வர்ணக் கிளிகள், மைனுக்கள் இவை ஆனந்தமாக ஏதோ தங்கள் பாஷையில் பாடிக்கொண்டிருந்தன. ஒரு புறம் வீணையும் மிருதங்கமும் ஸித்தாரும் சப்தித்தன.

மஹலுக்குள், சிறிதாயு மில்லாமல் பெரிதாயு மில்லாமல், ஒரு தடாகம் இருந்தது. நல்ல நிர்மலமான பனித் துளி போன்ற நீர் நிரம்பியிருந்தது. கோடை காலத்தில் எத்தனையோ சுந்தரிகள் அதன் கரையில் அமர்ந்து பேசினுர்கள்! சிலர் அதன் தண்ணீரில் தங்கள் தலையிலிருந்த ரோஜாப் புஷ்பங்களை மிதக்கவிட்டனர். சிலர் பேசிக்கொண்டிருந்தார்கள். சிலர் காது கொடுத்து ஸ்வாரஸ்யமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சிலர் மைனுவை வைத்துக்கொண்டு கொஞ்சிக்கொண்டிருந்தார்கள்.

உண்மையில் ரங்கமஹலில் ஒரே செளந்தரியக் கோலாகலமாக இருந்தது. அன்று வசந்த பௌர்ணமை! திறந்திருந்த ஜன்னல் வழியாகச் சந்திரன் தன் ஒளியை வீசினுன். அந்த வெளிச்சத்தின் மத்தியில் அவனைப் பழிக்கும் முகமுள்ள ரமணிகள், அவனை வெட்கப்படச் செய்வதைப் போல், சந்திரனை நோக்கினர். மென்காற்று செடிகளிலுள்ள மொட்டுக்களைத் தொட்டுத் தடவிச் சென்றது. அதன் ஸ்பரிசத்தால் அவை சிரிப்பதைப் போல் மலர ஆரம்பித்தன. அந்தச் சுந்தரிகள் டில்லி அதிபரான பாதுஷா ஜஹாங்கீரின் ஆதரவுக்குப் பாத்திரமானவர்கள்! அவன் காதலுக்குப் பிச்சைக்காரிகள்! அவனுடைய அனுக்கிரகத்தின் ஆசைக்காக

அவர்கள் எதிர்பார்த்து நின்றனர். பாதுஷா அன்று ரங்க மஹலுக்குள் வரவில்லை.

இரவு நெடுநேரமாகிவிட்டது! ஜன்னல் வழியாகச் சந்திரன் புகுந்து உள்ளேயுள்ள தடாகத்தில் மூழ்கினன். மலர் மாலைகள் மெள்ள மெள்ள மணத்தை இழந்தன. கூண்டுப் பறவைகள் உறங்கலாயின. ஜாடியிலுள்ள செடிகளின் புஷ்பங்கள் உதிர்ந்தன. எல்லா பேகங்களும் நிராசையடைந்து, தங்கள் தங்கள் அறைக்குத் திரும்பினர். அங்கே இரண்டு ஸ்திரீகள் மாத்திரம் இருந்தனர். ஒருத்தி ஸோபியா, மற்றொருத்தி ஈரானின் புதிய சுந்தரி பியாரி பேகம்.

பியாரி ரொம்பச் சோர்வடைந்திருந்தாள். அவள் ஸோபியாவைக் கூப்பிட்டு, 'ஸோபி! கொஞ்சம் ஒரு கிண்ணம் மது கொடேன்!' என்றாள்.

வேறு சமயமாக இருந்தால் ஸோபியா மறுத்திருப்பாள். ஆனால் அந்தச் சமயம் அவ் வழகிய பேகத்தால் அவளுக்குக் காரியம் ஆகவேண்டியிருந்தது. அவள் தங்கக் கிண்ணத்தில் மதுவை ஊற்றி, அதில் பன்னீர் விட்டுப் பனிக் கட்டிகளைப் போட்டு, அதை பேகத்திடம் கொடுத்தாள். பேகம் அதை ஒரே மூச்சில் குடித்துவிட்டாள். ஸோபியா ஒன்றும் கூறவில்லை.

பியாரி மெள்ள மெள்ள ஓர் உணர்ச்சியை யடைந்தாள். அவள் மார்பின் மேல் இருந்த ஒரு பெரும் பாரம் குறைந்தது போல் இருந்தது. அவள் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு விட்டு, தனக்குத் தானே பேசலானாள்: 'இன்று அவர் இனி வரமாட்டார்! சொல்லுகிறார்—பாட்டுப் பாடுவேனும்! தெரிகிறது! அவர் எப்படி இந்த விஷயத்தை மறந்துவிட்டார்!'

இதை ஸோபியா கேட்டாள். அவள் தன் மனத்திற்குள், 'விஷயம் இதுவரைக்கும் வந்துவிட்டதா?' என்று நினைத்து, வெளிப்படையாக, 'பியாரி!' என்றாள்.

'ஏண்டி, தோழி?'

'இந்த வெண்ணிலா இப்படியே கழிந்து போவதா?'

'ஏன் அம்மா! பாட்டுப் பாடிக் கழிக்கிறேன்!'

'இப்பொழுது பாட்டுப் பிடிக்காது! ஜஹாம்பனுக்குத் தெரியாமல் மேஹர்-உன்னிஸாவிடம் போகவில்லையே?'

'அந்த வழி பூராவும் அடைபட்டுவிட்டது! நான் அவளைச் சர்வ நாசம் செய்துவிட்டேன்!'

'நீ செய்தாயா? இதென்ன தோழி இது? அவள் உனக்கு ஏதாவது குற்றம் செய்தாளா?'

அந்தச் சமயம் பியாரிக்கு மதுவின் போதை நன்றாக ஏறியிருந்தது. அவள் மனம் திறந்துவிட்டது. அவள் கர்வத்துடன், 'அவள் குற்றவாளியல்ல! அவள் சௌந்தரியம்தான் குற்றவாளி! நான் இப்பொழுது வந்து இங்கு என்ன ஆதரவைப் பெற்று வருகிறேனோ அதற்கு அவள் தடையாக இருப்பாள்! அவளை யார்தான் ஹதம் செய்யாமலிருக்க முடியும்?'

'நீ முங்கேருக்கு எதற்காகச் சென்றாய்?'

'மலைக் காற்று வாங்க! தெரியாதா, எனக்குப் பெரிய பீடை ஏற்பட்டிருந்ததே!'

ஸோபியா சிரித்துக்கொண்டே, 'சரிதான்! ஆனால் முங்கேரிலிருந்து தாதி வேஷம் போட்டுக்கொண்டு பர்த்வானுக்கு எதற்காகச் சென்றாய்?'

இதைக் கேட்டுப் பியாரி நடுங்கினாள். 'உனக்கு இதெப்படித் தெரியும்?' என்று கேட்டாள் அவள்.

ஸோபியா ஒரு கள்ளக் குரலுடன், 'சீ! போடி தோழி! நீ அவநம்பிக்கைப் படுகிறாய்! நீதானே ஒரு நாள் சொன்னாய்!' என்றாள்.

பியாரி சிரித்தாள். 'மன்னித்துக்கொள்! எல்லா விஷயமும் எப்பொழுதும் ஞாபகம் இருப்பதில்லை. பர்த்வான் போகாவிட்டால் இவ்வளவு சீக்கிரம் காரியம் பூர்த்தியாகுமா?'

'எந்தக் காரியம் பூர்த்தி?'

'மேஹரின் சர்வ நாசம்!'

'எப்படி?'

'"மார்பில் காலால் உதைக்கிறேன்" என்ற வார்த்தையால் பாதுஷா ஒரேயடியாய்க் கோபத்தால் கொதித்துக் கொண்டிருக்கிறார்!'

'அதில் என்ன நம்பிக்கை? பாதுஷாவின் மனம் சமுத்திரத்தின் காற்றைப் போலச் சில சமயம் சாந்தமடையும், சில சமயம் சஞ்சலமடையும்!'

'இல்லை, தோழி! வெள்ளம் அணை கடந்துவிட்டது. மேஹர் இங்கு வந்து எவ்வளவு கஷ்டத்துடன் தன் நாட்களைக் கழிக்கிறாள் என்பதைக் கேட்டு எனக்குக்கூடத் தயை ஏற்பட்டுவிட்டது. ஒரு தாதிக்குக் கொடுக்கும் மாதச் சம்பளம்கூட அவளுக்குக் கிடைப்பதில்லை!'

ஸோபியா யோசித்தாள். பியாரி மானவி வேஷத்தில் தானவி! இந்த மாதிரியும் எப்பொழுதாவது யாரையாவது சர்வநாசம் செய்கிறார்களா? ஸோபியா, பியாரியின் காதோடு காதாக, 'மேஹர் இங்கு வந்த மறுநாள் பாதுஷா ரகசியமாக அவளைச் சந்திக்கச் சென்றாரா?' என்றாள்.

'ஆமாம்! மேஹர் கர்வத்துடன் இருந்தாள்! ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை! எழுந்து நிற்கக்கூட இல்லை. கால் உதைபட்டுக்கூட அவர் அவளை வேண்டிச் சென்றார். ஆயினும் மேஹர் அவரிடம் பேசவில்லை. அது முதல் அவர் அவளிடம் போவதில்லை. இந்த மாதிரி இப்பொழுது ஒரு வருஷம் ஆகிவிட்டது!' என்றாள் பியாரி.

ஆக்ராவின் மணிக் கூண்டில் மணி பதினொன்று அடித்தது. பியாரிக்குத் தூக்கம் தலை சுற்றியது. ஸோபியா ஒரு தாதியை அழைத்துக்கொண்டு நந்தவனத்தைப் பார்க்கச் சென்றாள்.

ஏழாம் அத்தியாயம்

எதிர்காலம் மனிதர் அதிர்ஷ்டத்திற்குள் ஒளிந்திருக்கிறது; காணக்கூடாததின் கையினுல், அறியக்கூடாத எழுத்துக்களில், எங்கேயோ என்னமோ எழுதி வைத்திருக்கிறது — அதை மனிதன் அறிய முடியுமாஞல், அது இருந்தும்கூட அவன் ஒருபொழுதும் துக்க மனுபவிக்க வேண்டியிருக்காது.

மனிதர்களுடைய கற்பனையின் சுக உத்தியானம், நிராசையின் உஷ்ணப் பெருமூச்சினுல் தகிக்கப்பட்டு விடுகிறது! மேஹர்-உன்னிஸா கல்யாணியின் பேச்சை ஒப்புக்கொண்டு, ஏதோ எண்ணிக்கொண்டு வந்து சேர்ந்தாள். எதிர்காலம் அவை யாவற்றையும் தலைகீழாக்கிவிட்டது. மேஹர் இப்பொழுது தன் புத்தி பலத்தால் தன் அதிர்ஷ்டத்தின் அந்தத் தெளிவில்லாத அக்ஷரங்களைப் படிக்க முடியும்.

அதைப் படிக்க முடிந்த காரணத்தால் எதிர்காலத்தை அறிந்து மேஹர் இன்னும் இடிந்து போனுள். மஹலில் ஒரு பக்கத்தில், யாருமற்ற அறையில் அமர்ந்து, மர்ம வேதனையினுல் சிந்தாகுலம் கொண்டு தவித்துக்கொண்டிருந்தாள். அவளுடைய மலர்ந்த முகம் கறுத்துக் காந்தியற்றிருந்தது.

பகல் எப்படியோ கழிந்துவிடுகிறது. ஆனுல் இரவு கழிவதில்லை. அவள் தன் அறையின் ஜன்னலண்டை நின்று, அருகே கலகலவென்று ஓடும் யமுனையைப் பார்த்துக் கொண்டு, குளிர்ந்த காற்றினுல் தன் சரீர உஷ்ணத்தை மட்டுப்படுத்திக்கொண்டு நித்திரைக்குச் செல்வாள். ஆயினும் தூக்கத்தால் அவளுக்குச் சாந்தி கிடைப்பதில்லை. விழித்திருக்கும்போது சிந்தனைகள், உறங்கும்போது கனவுகள்!

மேஹர்-உன்னிஸா இவ்வாறு கனவு காண்பாள்: தாமோதர நதி முத்தமிடும் அந்த மேட்டுப் பிரதேசத்தில், அந்த அடர்ந்த மாந்தோப்பில், தன் மாளிகையின் அறையில் தனியாகப் படுத்திருக்கிறாள்.......

தாமோதர நதியின் அடியிலிருந்து ஒரு கன இருள் எழுந்து வெளிச்சமற்ற அவள் அறையை வந்து சூழ்கிறது. பிரளயத்தின் கறுத்த காளமேகம் ஒரு க்ஷணம் களைப்பற்ற அவள் அறைக்குள் புகுந்தது போல் தோன்றுகிறது. அந்த அந்தகாரம், அவள் படுக்கை, அவள் மக்மல், கட்டிலின் கீழ்ப்புறம்,மேற்புறம், வாத்தியங்கள், புஷ்பச் செடிகள்—எங்கும் சூழ்ந்து சுற்றித் திரிகிறது. சிற்சில சமயங்களில் அவளைத் தூக்கிக்கொண்டு போக முயற்சி செய்வதைப் போல் தோன்றுகிறது. பயத்தினால் அந்தப் பேதை நடுங்குகிறாள். கூச்சலிட்டுக்கொண்டு எழுந்திருக்கிறாள். அவள் நித்திரை பங்கமடைகிறது. படுக்கையைவிட்டு எழுந்து, ஒரு முறை ஜன்னலண்டை சென்று, கருமை நிறங்கொண்ட யமுனையில் வீசும் சந்திரிகையைப் பார்ப்பாள்! மந்த மாருதத்தின் மெல்லிய ஓசையைக் கேட்பாள். சந்திரிகையில் மூழ்கி மௌனமாகக் கிடக்கும் யமுனை! சமீபத்தில் இருக்கும் ரங்கமஹலிலிருந்து வரும் அரைகுறையான சப்தங்கள் கேட்கும்!

மேஹர் ஆக்ரா வந்து ஒரு வருஷம் ஆகிவிட்டது. ஜஹாங்கீர் பாதுஷா ஒரு தடவைகூட அவளைப் பார்க்க வரவில்லை! பார்க்க வருவது ஒருபுற மிருக்கட்டும்! அவளைப் பற்றி அவர் விசாரிக்கக்கூட இல்லை. சர்க்காரால் அவளுடைய ஜீவனத்திற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோ அதனால் ரொம்பக் கஷ்டத்துடன் அவள் நாட்கள் கழிந்து வந்தன. மூன்று நான்கு தாதிகள் வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் சாப்பாட்டிற்கு வேண்டும். அவர்கள் நிர்வாகமும் கஷ்டத்தில்தான் இருந்தது. வெறுப்பாலும்

ரோஷத்தாலும் தன் துக்கத்தை மேஹர் யாரிடமும் சொல்ல வில்லை. சிலர், 'பாதுஷாவுக்குச் சொல்லியனுப்பு' என்று சொன்னார்கள். அதற்கு மேஹர் பதில் சொல்லவில்லை. மனத்திற்குள், 'இறப்பது மேல்! ஆனால் இவ்வளவு கீழாக வாழ்நாட்களைக் கழிக்கப் பிச்சை எடுக்க முடியாது!' என்று சொல்லிக்கொண்டாள். தவிரவும், அவள் தனக்குள், 'ஒரு பொழுதும் யார் முகத்தையும் நான் பார்க்க மாட்டேன். என் கை இருக்கிறது! சிற்பக் கலை கற்றிருக்கிறேன். எப்படியா வது நாட்களைக் கழித்துக்கொள்ளுகிறேன். டில்லி பாதுஷா வின் எச்சிலைத் தின்பதைவிட என்னுடைய சம்பாத்தியத்தால் குடிக்கும் கஞ்சி மேல்!' என்று நிச்சயம் செய்துகொண்டாள்.

என்ன பிரதிக்ஞை செய்துகொண்டாளோ அப்படியே காரியம் நடத்தினாள். தாதிகளையும் வேலைக்காரர்களையும் வைத்துக்கொண்டு அவள் சிற்பக் கலையை ஆரம்பித்தாள். அவளுடைய கைகள் செய்த ஜரிகை வேலைப்பாடுகள் கலையின் சிகரத்தைப் போய் எட்டின. தாதிகள் அவைகளை விற்க ஆக் ராவின் சௌக்கிற்கு வருவார்கள். முதல் வேலைப்பாட்டிற்கு மேஹர் தான் எதிர்பார்த்ததைவிடப் பல மடங்கு அதிக விலையைப் பெற்றாள். பத்து மோகரா கிடைக்கவேண்டிய சாமானுக்கு ஆயிரம் மோகராக்கள் கிடைத்தன. அது யார் அப்பேர்ப்பட்ட மஹா புருஷன்? சிற்பக் கலைப் பித்தன்? அந்த வெகுமதி அளித்த தானசூரன் யார்? மேஹரால் ஒன்றையும் அறிய முடியவில்லை. மேஹர் மோகராக்களை எண்ணிப் பெட்டியில் வைத்துவிட்டாள். அவள் தன் தாதி களுக்குச் சம்பளம் கொடுத்து அவர்கள் உடைகளையெல்லாம் மாற்றினாள். அரண்மனை முன்ஷியை அழைத்து, 'இன்று முதல் அரண்மனையிலிருந்து எனக்கு அனுப்புவதை நிறுத்தி விடுங்கள்! இனி நான் உங்கள் பிச்சையை எதிர்பார்க்க வில்லை!' என்றாள். முன்ஷி ஆச்சரியமடைந்து போனார்.

ஆக்ராவின் அந்தப்புரம் மேஹருக்காகத் திறந்துதான் இருந்தது. ஆயினும் அவள் தன் விடுதியினின்றும் ஒரு பொழுதும் வெளியே காலடி எடுத்து வைக்கவில்லை. அந்த மஹலில் இருவர் மாத்திரம் அவளிடம் அன்புடன் நடந்து கொண்டனர். ஒருத்தி அக்பரின் தாயான கிழவி ஹமீதா பானு பேகம் ஸாஹிபா; மற்றொருத்தி அம்பர் ராஜகுமாரியும் ஜஹாங்கீரின் பத்தினியுமான ஜோதாபாயி. கோடை காலம் வந்துவிட்டதால் ஹமீதா பானு லாகூர் சென்றுவிட்டாள். ஆகையால் அந்தச் சமயம், அந்த விசாலமான மஹலில் மேஹருக்கு இதமுள்ளவள் ஜோதாபாயி ஒருத்திதான். ஜோதாபாயி சில நாட்களாக மேஹரின் விடுதிக்கு வரவில்லை. ஜன்னலருகே அமர்ந்து ஏகாந்தமாக யோசனை செய்துகொண் டிருந்தாள் மேஹர்.

தாதிகள் சாப்பாட்டிற்குச் சென்றுவிட்டனர். மத்தி யானம் மேஹர் தனியாக அமர்ந்து தலைகுனிந்து தன் வேலை யைச் செய்துகொண்டிருந்தாள். அவள் மனம் கைவேலை யில் லயித்திருந்தது. அவள் பார்வை வேறெங்கும் செல் லாமல் கை வேலையில் பதிந்திருந்தது. திடீரென்று யாரோ எதிரே யிருந்த கதவைத் திறந்துகொண்டு சந்தடி செய்யா மல் அறையில் பிரவேசித்தார்கள். அவளுடைய மலர் போன்ற பாதங்கள் சந்தடியற்றுப் பூமியில் நடந்தன. அவள் வருவதை யாரும் அறிந்துகொள்ள முடியவில்லை. அந்த அன்னநடை யழகி உள்ளே பிரவேசித்து, பின் புறமாக வந்து மேஹரின் இரு கண்களையும் பொத்தினாள். மேஹர் கல்யாணியைப் பற்றி எண்ணமிட்டுக் கொண்டிருந் தாள். அவள்தான் வந்திருக்கிறாள் என்று எண்ணி, ஆவ லுடன், 'கல்யாணி! கல்யாணி! என் சகி! இவ்வளவு நாட்களுக்குப் பிறகாவது என் ஞாபகம் உனக்கு வந்ததே!' என்றாள்.

அவள் கல்யாணியல்ல! யார் பதில் சொன்னார்கள்? ரகசியமாகக் கண் புதைத்தவள் தன் குரலை மாற்றிக்கொண்டு, ‘நான் யார்? சொல்லேன், சற்று பார்ப்போம்!’ என்றாள்.

குரல் தெரிந்துவிட்டது! மேஹர் அறிந்துகொண்டாள். ‘தாங்களா வந்திருக்கிறீர்கள்? நல்லதாயிற்று! இவ்வளவு நாட்களாக ஏன் வரவில்லை? எனக்குத் தங்கள் மஹல் வரை வரத் தைரியம் கிடையாது! தனியாகவும் இருக்க முடியவில்லை! என் மனம் என்னவோ ஒரு மாதிரியாக இருக்கிறது!’ என்றாள்.

இதற்கு மேல் சும்மா இருக்க முடியாமல், வந்த சுந்தரி கையை எடுத்துவிட்டு எதிரே வந்து நின்றாள். அவளுடைய மலர்ந்த அழகிய முகத்தையும், கருணையும் மருட்சியும் கொண்ட கண்களையும், அவள் வதனத்தையும் கண்டு மேஹரின் அதரங்களில் நகையின் ரேகை படர்ந்தது. ‘வந்தனம், பேகம் ஸாஹிபா! என்னுடைய இந்த அறை இன்று புனிதமாயிற்று! இது என் சௌபாக்கியம்! இன்று எழுந்ததும் எந்தப் பாக்கியசாலியின் முகத்தில் விழித்தேனோ! தாங்கள் அம்பர் தேச ராஜ குலத்துதித்த ராஜபுத்திரி! டில்லி பாதுஷாவின் பட்டமகிஷி! இந்த ஏழையின் மேல் தங்களுக்கு மட்டற்ற கருணை! எல்லோரும் என்னைக் கைவிட்டார்கள்! கல்யாணியும் என்னை மறந்தாள்! தாங்கள் மாத்திரம் என்னை மறக்கவில்லை!’ என்றாள்.

அம்பர் ராஜ கன்னிகையான ஸாம்ராஜினி ஜோதாபாயி, தன்னை மேஹர் புகழ்வதைக் கண்டு வெட்கமடைந்தாள். அவள் கல்யாணியின் பாலிய சகி. கல்யாணி அவளுக்குக் கடிதம் எழுதியிருந்தாள். அதில், ‘மேஹர், என் ஆருயிர்த் தோழி. நீ என்னிடம் எப்படி அன்பாக இருக்கிறாயோ அதை விட அதிகமாக அவளிடம் அன்பு வை! அவளை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்’ என்று எழுதியிருந்தாள். ராஜ

புத்திரப் பெண்கள் கண்ணியமுள்ளவர்கள். ஜோதாபாயி மேஹறரைப் பார்க்க அடிக்கடி வருவது வழக்கம்.

பட்ட மகிஷி சற்று நேரம் சும்மா இருந்துவிட்டு, 'எப்படி முடியும்? அன்று நீ என்னைத் தேடிக்கொண்டு ரங்கமஹலுக்கு ஏன் சென்றாய்? நான்தான் என் மஹலிலேயே இருக்கிறேனே! ரங்கமஹல் பட்ட மகிஷிக்கு அல்லவே!' என்றாள்.

'மறந்துவிட்டேன்! தங்கள் மஹல்வரை வரத் தைரியம் இல்லை. கல்யாணியும் வரவில்லை. தாங்களும் ஒரு வாரமாக வரவில்லை!' என்றாள்.

ஜோதாபாயி மேஹறின் அருகே உட்கார்ந்தாள். மேஹர் ஒரு மக்மல் துணியின் மேல் முத்துக்களால் அழகாக ஜிகினு வேலை செய்துகொண்டிருந்தாள். அவள் சித்திர வேலை செய்த கலையழகு நிறைந்த ஒரு சிறு பெட்டியை எடுத்து, ஜோதாபாயியின் முன் வைத்து, 'இதை ஏற்றுக்கொள்ளுங்கள்! ஒரு சிறிய வெகுமதி! தீன ஸ்திரீயின் இந்த வெகுமதி ராணிகளுக்குத் தகுதியுள்ளதா? தாங்கள் இதை என் ஞாபகார்த்தமாக வைத்துக்கொள்வீர்களா?' என்றாள்.

மஹாராணி ஜோதாபாயி அந்த அழகிய சித்திர வேலைப்பாடுள்ள பெட்டியைக் கண்டு ஆச்சரியமடைந்து போனாள். மேஹர் நல்ல அழகி. அவள் சித்திரம் அதைவிட அழகாக விளங்கியது. அவள் அன்பு அதைவிட அழகாக இருந்தது. அதில் ஓர் அன்னம் தாமரையை எடுத்து எறிவதைப் போல் சித்திரிக்கப்பட்டிருந்தது. இதைக் கண்டு அவள் உள்ளம் கருணையால் உருகியது. பெண்ணானதால், பெண்ணின் துக்கத்தை சகஜமாகச் சட்டென்று அறிந்துகொண்டாள். அவளுடைய இரு கருவிழிகளினின்றும் இரண்டு கண்ணீர்த் துளிகள் கீழே உதிர்ந்தன.

மேஹர்-உன்னிஸா தலை குனிந்து, 'தங்களுக்குக் கல்யாணியிடமிருந்து ஏதாவது தகவல் கிடைத்ததா?' என்று கேட்டாள்.

'ஆமாம், கிடைத்தது!'

'எப்பொழுது வருகிறாள்?'

'சீக்கிரமாகவே! நாலைந்து தினங்களில் பாதுஷாவின் பிறந்த தினக் கொண்டாட்டம்! ராஜா கஜபதி வங்காளத்தில் ஒரு புரட்சியை அடக்குவதில் ஈடுபட்டிருக்கிறார். ஆனால் அன்று அவர் வந்தே தீரவேண்டும்! ராஜா வராவிட்டால் ராணியும் வரமாட்டாள்!' என்றாள்.

மேஹர்-உன்னிஸா இதைக் கேட்டுச் சற்று நகைத்தாள். பிறகு, 'தாங்கள் இங்கு அடிக்கடி வருவீர்கள் என்று நம்புகிறேன். இவ்வளவு பெரிய மஹலில் ஒரு மூலையில் கைதியைப் போல் யாரால் இருக்க முடியும்? என்னை விட்டுவிடுங்கள்! எங்கே மனம் விரும்புகிறதோ அங்கே சென்றுவிடுகிறேன்!' என்றாள்.

ஜோதாபாயி மேஹரின் முகவாய்க் கட்டையைப் பிடித்து, அன்புடன், 'இதெல்லாம் என்ன சொல்லுகிறாய் நீ? நான்தான் எப்பொழுதும் வருவேனே! கல்யாணி வந்தால் அவளுடனும் வருவேன்!' என்று கூறி மெள்ளப் புறப்படத் தயாரானாள்.

மேஹர் அவள் பக்கம் பார்த்து, 'ராஜபுத்திர குல லக்ஷ்மி! உன் தயவை நான் ஒருபொழுதும் மறக்கமாட்டேன்! உன்னுடைய இன்சொல்லை இந்தத் துர்ப்பாக்கியம் பிடித்தவள் ஒரு நாளும் மறவாள். இந்த ஜீவனில் மாத்திரமல்ல, இறந்தாலும் மறக்கமாட்டேன்! என்னுடையதெல்லாம் போய்விட்டது! கருணும்பா! நீதான் இருக்கிறாய். நீ பட்ட மகிஷியாக இருக்க யோக்கியதை உடையவள்தான்' என்றாள்.

ஜோதாபாயி அவளைத் தேற்றி அவளிடம் விடை பெற்றுச் சென்றாள்.

எட்டாம் அத்தியாயம்

மாலை நேரம்! ஜோதாபாயி சிங்காரிக்கப்பட்ட தன் அறையில் மக்மல் மெத்தையில் அமர்ந்திருந்தாள். அறையில் ஒரு மூலையில் விநாயகர் சிலை! ஒருபுறம் காளிங்கனை சம்ஹாரம் செய்யும் கிருஷ்ணன், ஒரு புறம் காமனைக் கண்ணழலால் எரித்த சிவபெருமானின் சித்திரம், ஒரு புறம் ரதியின் விலாபம், ஒரு புறம் கானில் தோன்றும் சந்திரிகை — இந்த மாதிரிப் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. வீணையேந்தி அமர்ந்திருக்கும் வாணியின் சித்திரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள் ஜோதாபாயி. அவள் பிராணனின் ஒரு மிருதுவான சங்கீத அலை புரண்டுகொண்டிருந்தது. அடிக்கடி திறந்த ஜன்னல் மூலம் அந்தி வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அருகேயுள்ள பரிமளம் மிகுந்த தாம்பூலங்களைத் தரித்துத் தன் செவ்விதழ்களை இன்னும் சிவப்பாக்கிக்கொண்டாள். மாலை நேரத்திற்குப் பிறகு பாதுஷா வரும் நேரம். நாளை அவருடைய ஜன்மோத்ஸவம். ஆக்ரா நகரம் பூராவும் இந்த உத்ஸவ ஆனந்தத்தில் மூழ்கும். அந்தச் சமயம் பாதுஷா வரத் தாமதமானதைக் கண்டு ராணி கலங்கினாள். அருகே இருந்த வீணையை எடுத்துத் தன் மலர்க் கரங்களால் அதன் நரம்புகளைத் தொட்டு மதுர ஜங்காரம் செய்தாள்.

ஸ்வரம் எழுந்தது. காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதத்தையும் தாண்டிச் சென்றது! இந்த ஸ்வரங்களுடன் ராணியின் குரலும் இழைந்தது. அவள் பாடலானாள் :

ஆசை முகம் மறந்து போச்சே!—இதை
யாரிடம் சொல்வேனடி தோழி!

ஓய்வு மொழிதலு மில் லாமல்—அவன்
உறவை நினைத்திருக்கு முள்ளம் ;
வாயு முரைப்பதுண்டு கண்டாய்—அந்த
மாயன் புகழினை எப்போதும் (ஆசை முகம்)

தேனை மறந்திருக்கும் வண்டும்—ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும்—இந்த
வைய முழுதுமில்லை தோழி ! (ஆசை முகம்)

வீணை மதுரமாக அவள் குரலுடன் சேர்ந்து இசை பெருக்கிக்கொண்டிருந்தது. அதன் தொனி காற்றுடன் கலந்து அந்த வெள்ளைக் கற்களாலான சுவர்களில் மோதி அந்த மஹலில் எதிரொலித்தது.

ஒரு மனிதன் பாதி திறந்திருந்த ஜன்னலருகே நின்று பாட்டைக் கேட்டுக்கொண்டிருந்தான். ராணி விரக்தியுடன் வீணையைக் கீழே வைப்பதைக் கண்டு அவன் உள்ளே பிரவேசித்தான். பின்புறம் வந்ததால் ராணி அவனைப் பார்க்க முடியவில்லை. ஆனால் எதிரேயுள்ள நிலைக் கண்ணாடியில் அவனுடைய பிரதிபிம்பத்தைக் கண்டு சட்டென்று எழுந்து நின்றாள். டில்லி அதிபதி அருகே வந்து நின்றார்!

ஜஹாங்கீர் அன்பு நிறைந்த குரலில், 'ஹிருதயேசுவரி! இவ்வளவு நாட்களுக்குப் பிறகு இந்த விரக வேதனை எங்கிருந்து வந்தது?' என்று கேட்டார்.

மஹாராணி சிரித்துக்கொண்டே, 'ஜஹாம்பனாஹ்! இது என்னுடைய விரகமல்ல! இது வேறொருத்தியினுடையது!' என்றாள்.

ஜஹாங்கீர் ஷா சிரித்துக்கொண்டே, 'உன்னுடைய இந்த ஹிந்துஸ்தானிப் பாட்டு எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது!' என்றார்.

அந்தச் சமயம், திறந்த ஜன்னல் வழியே புகுந்து வீசும் காற்றில் ஜோதாபாயியின் அளகபாரம் அசைந்தாடிக் கொண்டிருந்தது. மஹலில் ஒளி வீசும் ஆயிரக் கணக்கான விளக்குகள் அந்த அழகியின் முகத்தில் ஒளியைப் பாய்ச்சின. ஜஹாங்கீர் காற்றில் அசைந்தாடும் அவள் கூந்தலைக் கோதி, அன்புடன், 'இப்பொழுது என்னை ஏன் அழைத்தாய்?' என்றார்.

'நாளைத் தங்கள் ஜன்மோத்ஸவம்! தேசத்திலுள்ள ஏழை எளியவர்கள் இஷ்டப்படி பிச்சை பெற்றுக்கொள்வார்கள்! நான் ஹிந்துஸ்தானத்தின் மஹாராணி! டில்லி அதிபதியின் பட்ட மகிஷி என்ற உறவில், இந்த உத்ஸவத்தின் சாக்கில், தங்களிடம் ஒரு பிச்சை கேட்கப் போகிறேன்!' என்றாள்.

'என்ன பிச்சை? டில்லி ராணி எதற்குப் பிச்சைக்காரி? அவள் என்ன விரும்புகிறாள்?'

'மன்னிப்பு!'

'யாருக்கு?'

'என் ஆருயிர்த் தோழிக்கு!'

'உன் பிரிய சகி கல்யாணி! ராணா கஜபதி சிம்மனின் ராணி! அவள் என்ன அபராதம் செய்தாள்? ஒரு வருஷமாக அவளை இங்கே காணோமே!'

'கல்யாணியல்ல! மற்றொரு சகி! அவள் கல்யாணியைவிட எனக்கு அதிக நேசமானவள். இன்னும் எத்தனை நாள் அவளை இம்மாதிரியாகத் தாங்கள் வைக்கப் போகிறீர்கள்? இவ்வளவு கஷ்டத்துடன் மரத்திலிருந்த பூவைப் பறித்து அதை அனாதரவாய் ஏன் தரையில் வீசி எறிந்தீர்கள்?'

அது மேஹர்-உன்னிஸாவைப் பற்றிய விஷயம் என்பதை ஜஹாங்கீர் அறிந்துகொண்டார். அது அவருக்குப்

பிடிக்கவில்லை. 'இதற்காகத்தான் என்னை அழைத்தாயா?' என்றார்.

'ஆமாம், ஜஹாம்பனாஹ்! இந்த அடியாளின் எண்ணம் பூர்த்தியாகுமா?'

'ஆகும்! ஆனால் அன்று — அவள் என்று மார்பில் காலால் உதைக்கும் விஷயத்தை மறக்கிறாளோ அன்று!'

'யார் சொன்னார்கள்? மேஹர் இம்மாதிரி சொன்னாளா?'

'பியாரி பேகம் நேரே மாறுவேஷத்தில் பார்த்வான் சென்றிருந்தாள்! இந்த வார்த்தைகளை அவளே காதால் கேட்டாள்!'

'அவளுக்கு இதைப் பற்றி இவ்வளவு அக்கறை வருவானேன்?'

'இல்லை! அவள் தன் வேலையாக ராஜமஹல் சென்றாள்! மேஹர்-உன்னிஸாவின் ரூபம் எப்படியிருக்கிறது என்பதைப் பார்க்கச் சென்றாள்!'

'பியாரி பேகம் சொல்வது பொய்! அவள் மேஹரின் சத்துரு!'

'இருக்கலாம்! ஆனால், "மார்பில் காலால் உதைப்பேன்" என்று சொன்னது வாஸ்தவம். நான் அதை நம்புகிறேன். நான் அவளிடம் மறைவாகப் பேசிய அன்று......'

ஜோதாபாயி பதட்டத்துடன், 'ஜஹாம்பனாஹ்! மன்னியுங்கள்! பெண் உள்ளத்தைப் பெண்கள் எவ்வளவு அறிவார்களோ அவ்வளவு ஆடவர் அறிய முடியாது! மேஹர் சுபாவமாகவே ரோஷக்காரி! ரோஷத்தில் ஒரு கர்வமான அலட்சியம் இருக்கிறது! ஆனால் உள்ளூர அம்மாதிரி ஒன்றும் இல்லை. மேஹர் எந்த நிலைமையில் இந்த நகருக்குள் வந்தாள் தெரியுமா? தாங்கள் அதைப் பார்த்திருக்க மாட்டீர்கள்!' என்றாள்.

ஜஹாங்கீர் ஷா என்ன யோசித்தாரோ என்னவோ, ‘சரி, இப்பொழுது என்ன செய்யவேண்டும்?’ என்றார்.

‘நாளைத் தங்கள் ஜன்மோத்ஸவம்! எல்லா பேகங்களும் ஆனந்தத்தில் மூழ்கியிருப்பார்கள்! பெரிய மனிதர் வீட்டுப் பெண்களும் சிறுமிகளும் ரங்க மஹலில் வந்து நிறைவார்கள். அந்த விசாலமான மஹலிலிருந்து மேஹர் மாத்திரம் ஏன் ஒதுக்கப்பட வேண்டும்? அவளை அழைத்து வந்து எல்லோரையும்விட அவளுக்கு அதிக மரியாதை செய்யவேண்டும்!’ என்றாள் ராணி.

‘உன்னைவிட அதிக மரியாதை செய்கிறேன்! அதனால் உனக்கொன்றும் வருத்த மேற்படாதே?’

‘இல்லை, ஜஹாம்பனாஹ்! நான் தங்கள் பட்டத்து ராணி! நான் அவளுக்காகச் சிம்மாதனத்தில் பாதியை விட்டுக் கொடுக்கிறேன்!’

ஜஹாங்கீர் ஷா மனத்திற்குள், ‘ராஜபுத்திர ரமணிக்கு யோக்கியமான வார்த்தைகள்!’ என்று கூறிச் சற்று யோசித்து, ‘என்ன வேண்டுமானாலும் சொல்லு, இந்தச் சமயம் நான் உன் வேண்டுகோளைப் பூர்த்தி செய்ய முடியாது! மஹாராணி! என்னை மன்னித்துக்கொள்!’ என்றார்.

ஜோதாபாயி கர்வத்துடன், ‘சேச்சே! ஜஹாம்பனாஹ்! தாங்கள் பெரிய சக்ரவர்த்தி யல்லவா? தங்களுக்கு இவ்வளவு கடின ஹிருதயம் எப்படி இருக்க முடியும்? மேஹர் ஸ்திரீ ரத்தினம்! அவளுடைய உள்ளத்தைத் தாங்கள் அறிய மாட்டீர்கள். இவ்வளவு பெரிய கஷ்டமா? இன்று ஒரு வருஷமாகப் போகிறது! அவள் வெறுப்புடன் தாங்கள் கொடுக்கும் சோற்றைத் தொடுவதுகூடக் கிடையாது! அவள் தன் சிற்பக் கலையினால் தன் ஜீவனத்தை நடத்துகிறாள். அவள் தன் தாதிகளுக்குக் கொடுக்கும் ஆடைகள் தங்கள் பேகம்களுக்குச் சுலபமாகக் கிடைக்கக்கூடியன அல்ல. டில்லி

அதிபதிக்குப் பட்ட ராணியாக அவள் தகுதியானவள் தான்!' என்ருள்.

ஜஹாங்கீருக்கு மேஹரின் கஷ்ட ஜீவனத்தை யாரும் இதுவரை சொன்னது கிடையாது! அவர் இதைக் கேட்டு ஆச்சரியமடைந்து போனுர். அவர் ஹிருதயத்தில் மீண்டும் ஒரு தரம் அந்தப் பழைய காதலின் மலர் மலர்ந்தது. பாதுஷா இனிய குரலுடன், 'நீ அவள் மஹலுக்குச் செல்வதுண்டா?' என்று கேட்டார்.

'சில சமயம் போவதுண்டு. ஆனுல் கோபத்தின் காரணமாக அவள் இங்கு வருவதில்லை! நான் அவளை நேசிக்கிறேன். ஆகையால் செல்லுகிறேன்! அவளைப் பார்க்காமல் என்னுல் இருக்க முடியாது!'

பாதுஷா அடக்கத்துடன், 'நாளை முன்ஷியிடம் சொல்லுகிறேன்! நான் அவளை ராணிக்குச் சமமாக வைக்கக் கட்டளையிட்டிருந்தேன்!' என்ருர்.

'முன்ஷிகளின் மேல் யாதொரு குற்றமும் இல்லை! மேஹரேதான் அவைகளை வேண்டாமென்று கூறிவிட்டாள். நான் ஒரு நாள் அவளிடம், "உன் தாதிகளுக்கு ஏன் இம் மாதிரி உயர்ந்த ஆடை கொடுக்கிருய்? நீ ஏன் இம் மாதிரி சாதாரண ஆடை அணிகிருய்?" என்று கேட்டேன். அதற்கு அவள், "இவர்கள் என் தாதிகள். நான் இவர்களை என் இஷ்டப்படி வைப்பேன்! நான் யாருடைய தாதியோ அவர் என்னை எப்படி வைத்திருக்கிருரோ அப்படித்தானே நான் இருக்கவேண்டும்!" என்ருள்.'

ஜஹாங்கீருக்கு உள்ளத்தில் ஓர் ஈட்டி பாய்ந்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. 'காலால் உதைக்கிறேன்' என்ற விஷயம் மறந்தே போய்விட்டது. மேஹரின் சரத்காலத்துப் பூர்ணிமைச் சந்திரனை நிகர்க்கும் முகம் அவர் மனக் கண் முன் தோன்றி நின்றது. அவர் தம் மனத்

திற்குள், 'அவளிடம் இவ்வளவு குணம் இருக்கிறதா! நான் என் பாபத்திற்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ளுகிறேன்' என்று கூறிக்கொண்டு, வெளிப்படையாக, 'பிரியே! நான் உன் வற்புறுத்தலை நாளை நிறைவேற்ற முடியாது! இரண்டொரு தினங்களில் யோசித்துச் சொல்லுகிறேன்!' என்றார்.

'ஜஹாம்பனாஹ்! ஹிருதயேசுவரா! இந்த அவமானத்தால் அவள் உள்ளம் வெடித்துவிடும். எல்லோரும் உத்ஸவ தினத்தன்று அழைக்கப்பட்டு ஆனந்தமடையும் போது, அவளைப் பற்றி யாரும் ஞாபகம்கூடச் செய்யாமலிருப்பதைக் கேட்டால், அவள் ரோஷத்தால் விஷத்தைக் குடித்தாலும் குடித்துவிடுவாள்!' என்றாள் ஜோதாபாயி.

ஜஹாங்கீர் இதற்கு ஒன்றும் பதில் கூறவில்லை. அவர் ஹிருதயத்தில் சொல்ல முடியாத ஒரு ஜ்வாலை எழுந்தது. அந்த ஜ்வாலையால் அவர் கலங்கினார். அந்தச் சமயம் அதிகமாக மஹாராணியிடம் பேசுவது அவருக்கு நன்மையாகத் தோன்றவில்லை. அவர் சட்டென்று எழுந்து, 'நாளைக் காலை இதற்குப் பதில் சொல்லுகிறேன்! இன்று வேலை ரொம்ப இருக்கிறது!' என்று சொல்லி விடை பெற்றார்.

ஜஹாங்கீர் பாதுஷா சென்றார். ஜோதாபாயி பாதுஷாவின் நிலைமையைப் பார்த்துப் பியாரி பேகத்தின் தலையணை மந்திரத்தை ஒருவிதமாக அனுமானம் செய்துகொண்டாள்.



ஒன்பதாம் அத்தியாயம்

ஆக்ராவிலிருந்து சிறிது தூரத்தில், செடி கொடிகளால் சூழப்பட்ட மசூதி ஒன்றில், ஸலீம்ஷாஹ் என்ற பெயருள்ள பக்கிரி ஒருவன் இருந்தான். ஸலீம்ஷாஹ் என்பவன் ஸர்வக்ஞன் என்று ஜனங்கள் அறிவார்கள். ஆனல் அவன் வசிக்குமிடம் ஓர் ஒதுக்குப்புறமான காடாக இருந்ததால், அவனைப் பூத, பிரேத, பைசாச பக்தனென்று எண்ணி, அங்கே பகலில்கூட யாரும் செல்லத் துணிவதில்லை.

ஸலீம்ஷாஹ் அக்பர் பாதுஷாவின் சபைக்கு வந்து போவது வழக்கம். அவர் இறந்த பிறகு அவனை ராஜ தர்பாரில் யாரும் பார்த்ததில்லை. முஸல்மான் பக்கிரியாக இருந்தாலும் ஹிந்து ஜோதிஷத்தில் அவனுக்கு விசேஷ ஞானம் இருந்தது.

விளக்கின் மங்கிய பிரகாசத்தில் வயோதிகனன பக்கிரி ஏகாந்த சித்தனய் ஏதோ எண்களை வகுத்துக்கொண்டிருந்தான். அருகே ஓர் அழகி அமர்ந்துகொண்டு அந்த எண்களின் பக்கம் பார்த்துக்கொண்டிருந்தாள். விளக்கின் மங்கிய ஒளி அவள் முகத்தில் விழுந்து அவள் அழகை வெளிப்படுத்தியது. அவள் முகக் காந்தியால் அந்தத் தீபத்தின் ஒளி வெட்கப்படுவது போல் தோன்றியது.

பக்கிரி தலைநிமிர்ந்து பார்த்தான். ரமணி தனது கோகில த்வனியில், 'பிரபோ, என்ன பார்த்தீர்கள்?' என்ருள்.

'குழந்தாய்! உன் அபீஷ்டம் பூர்த்தியாகாது!' என்ருன் ஸாது.

'ஆனல் டில்லி சிம்மாதனம் என்னுடையதல்லவா?'

'இல்லை!'

'ஏன் இல்லை?'

'மற்றொரு சௌபாக்யவதி உனது அதிருஷ்டத்தை மறைத்து வைத்திருக்கிறாள்!'

'அவளைத் தொலைத்துவிடுவேன்!'

'முடியாத விஷயம்! நீ அந்தக் காரியம் செய்யவும் கூடாது! பெண் பாவம் பொல்லாது! பெண்ணே! அதிருஷ்டத்தில் எழுதியிருப்பதைத் தடுக்க உனக்குச் சக்திதான் ஏது?'

'பிரபோ! என்ன ஆகிவிட்டது? என்னுடைய பலன் தான் என்ன? பெரும் துக்கமாகிறதே?'

'பலனைப் பற்றிக் கேட்காதே, பயந்து போவாய்!'

'பயப்படுவதாக இருந்தால், இந்த இரவில், டில்லிக்கு அதிபனின் பிரியையாக இருந்தும், இங்கு ஏன் வருகிறேன்? தாங்கள் என்ன பார்த்தீர்கள்! வெளிவிட்டுச் சொல்லுங்கள்!'

'பார்க்கிறேன். உன் அதிருஷ்டத்தில் ஏமாற்றம் ரொம்ப இருக்கிறது! விஷம் இல்லை—ஆனால் கூரிய கட்டாரியால் உன் உயிர் போகும்!'

ரமணி நடுங்கினாள். அவள் உள்ளத்தில் ஒரு மின்னல் வெட்டியது. அவள் உயிர் வியக்தமற்ற வேதனையினால் எரிமலை போல் பொங்கியது. அவள் சட்டென்று எழுந்து நின்று, 'பிரபோ! தங்கள் கால்களில் விழுகிறேன்! உத்தரவு கொடுங்கள்!' என்றாள்.

'தனியாகவா அம்மா போகப் போகிறாய்? இப்பொழுது மணி பதினொன்று ஆகிவிட்டதே!'

'பயமொன்றும் இல்லை! பல்லக்கு அருகேதான் இருக்கிறது!'

'இல்லாவிட்டால் நான் கூட வருகிறேன்!'

'அவசியமில்லை!'

ரமணி சென்றாள். எதிரே அந்தகார மயமான ஒரு வழி இருந்தது. அதில் நடந்தாள். அந்தச் சமயம் யாரோ

பின்னுலிருந்து அவள் துணியைப் பற்றி இழுப்பதைப் போல் தோன்றியது. 'பியாரி பேகம்!' என்று யாரோ அழைத்தனர்.

அந்த ஸ்திரீ நடுநடுங்கினுள்! எதிரே தலையிலிருந்து கால் வரை துணியால் மூடிக்கொண்டு ஒரு மனிதன் நின்றுகொண்டிருந்தான். அவள் தழுதழுத்த குரலில், 'நீ யார்? ஏன் என்னை வழி மறித்தாய்?' என்ருள்.

'பியாரி பேகம்! நான் உன் சத்துருவல்ல! என்னை நண்பனென்றறி! சொல்! இந்த ராத்திரியில் எங்கே சென்றிருந்தாய்?'

'பக்கிரியிடம்! இதைப் பற்றி உனக்கென்ன?'

'எனக்கொன்றுமில்லாவிட்டால் நான் ஏன் கேட்கிறேன்? ஸலீம்ஷாஹ் பக்கிரி எந்தக் காரியத்தைச் செய்ய முடியாதோ அதை நான் செய்ய முடியும்! உன் வழியில் நிற்பவளைத் தொலைத்துவிடுகிறேன்!'

பியாரிக்கு ஆச்சரியமாகிவிட்டது. இந்த மாதிரி விபத்தில் அவள் ஒருபொழுதும் சிக்கியது கிடையாது. அவள் தைரியத்துடன், 'அறியாத வழிப்போக்கர்களை நம்ப இஷ்டமில்லை! இது நடுவழியில் நின்றுபேசக் கூடிய விஷயமல்ல! என்னுடன் வா!' என்ருள்.

'நீ என்னைப் பிடித்துக் கொடுத்துவிடுவாய்! இல்லை, பியாரி பேகம்! அது முடியாது. இங்கே பார்! மேலே அனந்த நீலமய ஆகாயம் இருக்கிறது! அதன் மேல் அந்தர்யாமியான பிரபு இருக்கிருர்! அவர் முன் ஒருவருக்கொருவர் கெடுதல் செய்வதில்லை என்று சபதம் செய்துகொள்வோம்!'

இம்மாதிரி சபதம் செய்துகொள்வதில் யாதொரு கெடுதலும் இல்லை என்று எண்ணினுள் பியாரி. 'சரி சொல்லு! நீ என்ன விரும்புகிருய்?' என்ருள்.

'நீ மேஹர்-உன்னிஸாவைப் பார்க்க பர்த்வான் செல்ல விரும்பிய பொழுது விருத்த சேனாபதி ரஹமத்கானின் கட்டளைப்படி உன்னை யார் பர்த்வான் கொண்டு சேர்த்தார்கள் என்பது ஞாபகமிருக்கும்.'

'ஞாபகம் இருக்கிறது! அவன் ருஸ்தும் அலி என்ற பெயருள்ள சேனாபதி! ஆனால் அவன்தான் இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டேனே?'

'பேகம் ஸாஹிபா! ருஸ்தும் அலி இறக்கவில்லை! அவன் உன் எதிரே நிற்கிறான்!'

பியாரி பயத்தால் நடுங்கினாள். பழைய மசூதியின் பேய் பிசாசின் ஞாபகம் அவள் மனத்தில் மீண்டும் எழுந்தது. அவள் மனத்திற்குள் நக்ஷத்திர கணங்களின் பவித்திர நாமங்களை ஜபித்தாள்.

'பியாரி! நான் இறக்கவில்லை! யாருடைய ஹிருதயத்தில் காதல் இருக்கிறதோ அவர்கள் இறப்பதில்லை. ரஹமத் என்னைச் சிறைச்சாலைக் கனுப்பினான். நான் அங்கிருந்து தப்பித்து மாறு வேடமணிந்து சுற்றிக்கொண்டிருக்கிறேன்! இறந்தேன் என்ற விஷயம் பொய்! நம்பிக்கையிருப்பவன் ஏன் இறக்கப் போகிறான்?'

'நீ என்ன விரும்புகிறாய், ருஸ்தும்? நான் உன்னை நம்புகிறேன்! சொல்லு!'

'என்ன விரும்புகிறேன்? யாருக்காக என் உள்ளம் எரிந்து வருகிறதோ — யாருக்காக என் மானம் மரியாதை யாவற்றையும் இழந்தேனோ — யாருக்காகத் திருடனைப் போல் அலைந்து திரிகிறேனோ—விளக்கின் ஒளியிலிருந்து சுடரி எந்த ஒளியைப் பிரிக்க முடியாதோ—அதைத்தான் விரும்புகிறேன்! அவள்தான் உன் சத்துரு!'

'அவள் யார்?'

'மேஹர்-உன்னிஸா!'

'சர்வநாசம்! ருஸ்தும், உனக்குப் பைத்தியமா? நீ என்ன சொல்லுகிறுய்?' பியாரி பேகம் இதன் தாத்பரியத்தை அறிந்துகொள்ள முடியவில்லை. அவள், 'என்ஞல் என்ன ஆகவேண்டும்? நான் என்ன செய்வேன்?' என்ருள்.

'நீ சகாயமாக இரு, பியாரி! நீ ஒருபொழுதும் யாரிடமும் காதல் கொள்ளவில்லை. காதலின் மர்மத்தை நீ என்ன அறிவாய்? நீ தன சம்பத்துக்களை விரும்புகிறுய்! ஆகையால் இன்று இந்த இரவில் இந்தத் துணிச்சலான காரியத்தைச் செய்யத் துணிந்தாய். நான் அந்த ரமணி ரத்தினத்தைக் காதலிக்கிறேன்! இதைத் தவிர அவளுக்காக நான் இன்னெரு தைரியமான காரியத்தைச் செய்வேன்! நீ என்னைக் கோட்டைக்குள் அழைத்துச் செல். அவள் மஹலை எனக்குக் காட்டு! நான் உனக்காக உயிரை வேண்டுமாஞலும் தருகிறேன்!' என்ருன்.

பியாரி மனத்திற்குள் சங்கற்பம் செய்துகொண்டாள். அந்தச் சங்கற்பத்தைப் பூர்த்தி செய்ய இந்தத் துராசாரியான ருஸ்துமைத் தனது சகாவாக எண்ணிக்கொண்டாள். மறுநாள் உதயத்திற்குள் உலகத்தின் முன் மேஹர்-உன்னிஸா களங்கமுள்ளவள் என்ற வதந்தியைப் பரப்பிவிட்டால் அதுவே போதும்! அவளுக்கு யாதொரு தடங்கலும் இல்லை. அவள் யோசனை செய்து, 'நான் உன்னைக் கோட்டைக்குள் அழைத்துச் சென்ருல் நீ என்ன செய்வாய்?' என்ருள்.

'நான் அவளை ஒரு தரம் சந்திப்பேன். இதோ பார்! என் கையிலிருக்கும் இந்த ரோஜாவை அவளுக்குக் காதல் வெகுமதியாகக் கொடுக்கக் கொண்டுபோகிறேன்! ஒரு முறை அவளைப் பார்த்துவிட்டுத் திரும்பிவிடுவேன். பிறகு கண்ணுக்குத் தெரியுமிடம் கால் நடக்குமிடம் சென்று விடுவேன்!'

'என்னுடன் வா! ஆனால் நீ இந்தப் பக்கிரி வேஷத்துடனேயே செல்வாயா?'

'ஆமாம்! நான் ஸலீம்ஷாஹின் சீடன். சர்வ சாதாரணமாக இந்த வேஷத்திலேயே அறிமுகமாகி யிருக்கிறேன். பிடிபட்டால் கூட இந்த வேஷத்தின் சகாயத்தால் குற்றம் பெரிதாக மதிக்கப்படாமல் போனாலும் போகலாம்!'

பியாரி யோசிக்கலானாள். உபாயம் என்னவோ கெடுதலொன்றுமில்லை! ஒரு கணம் பொறுத்து அந்தகாரத்தில் புகுந்து இருவரும் நடந்தனர்.

சமீபத்தில் யாரோ பணக்காரன் ஒரு மசூதி கட்டிக் கொண்டிருந்தான். வழியில் சித்திரவேலை செய்யப்பட்ட பெரும் பெரும் பாறைகள் கிடந்தன. சில நாற்கோணமாகவும், சில முக்கோணமாகவும் கிடந்தன. 'ருஸ்தும் கொஞ்சம் நில்! பார்ப்போம் உன் புஜத்தில் எவ்வளவு பலம் இருக்கிற தென்பதை!' என்றாள் பியாரி.

இதைக் கேட்டு ருஸ்துமுக்கு ஆச்சரியமாகிவிட்டது. அவள் வார்த்தையின் கருத்தை அறியாமல், 'வெகு நாட்களாக வேலை வெட்டி ஒன்றும் செய்யவில்லை. களத்தில் இறங்கவில்லை. ஆகையால் ஒன்றும் சொல்ல முடியாது!' என்றான்.

'கொஞ்சம் இந்தப் பெரிய பாறையைப் புரட்டேன், பார்ப்போம்!'

ருஸ்தும் அப்படியே செய்தான்.

'கோட்டைக்குள் நுழையு முன் ஒரு பிரதிக்ஞை செய்! அதாவது, "நான் உன் வழியைச் சுத்தம் செய்துவிடுகிறேன்!" என்று சொல்லு. இதன் அர்த்தம் என்னவென்றால் மேஹர்-உன்னிஸாவை இன்றிரவே தூக்கிக்கொண்டு போய் விட வேண்டும்! ஒரு ரமணியின் கனம் இந்தக் கல்லைவிட அதிகம் இராது! நீ அவளை ரொம்பக் காதலிக்கிறாய். இதில் சந்தேகம் கிடையாது!' என்றாள் பியாரி பேகம்.

'உன் உத்தேசத்தை அறிந்தேன்! நீ அவளைக் களங்க முடையவளாக்கி உன் வழியைச் சீர்செய்துகொள்ளப் பார்க்கிறாய்! ஆனால் பியாரி! நான் அவளைக் காதலிக்கிறேன்! அவளைச் சர்வநாசம் செய்ய முடியாது!' என்றான் ருஸ்தும்.

பியாரி கோபத்துடன், 'ஆனால் இங்கேயே இரு! நீ கோட்டைக்குள் பிரவேசிக்க முடியாது!' என்றாள்.

எதிரே பிரம்மாண்டமான கோட்டை வாயில்! அதிகம் ஆலோசிக்க நேரமில்லை. ருஸ்தும் மனத்திற்குள் யோசனை செய்யலானான். ஒரு புறம் விரதம்! ஒரு புறம் சந்திப்பு! ஒரு புறம் சுவர்க்கம்! ஒரு புறம் நரகம்! ஒரு புறம் நபி கணங்கள்! ஒரு புறம் சைத்தான்கள்! அவன் சைத்தானின் ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டுவிட்டான். கடைசியில் துராசாரியான அவன், காதலியைக் களங்கமுள்ளவளாக்கப் பியாரி சொன்ன தீர்மானத்தை ஒப்புக்கொண்டான். பிறகு கோட்டைக்குள் பிரவேசிக்க யாதொரு தடையும் ஏற்படவில்லை.



பத்தாம் அத்தியாயம்

இரவு கழிந்ததும் ஆக்ரா நகரம் பாதுஷாவின் ஜன்மோத்ஸவத்தில் மூழ்கித் திளைக்கப் போகிறது. இந்தச் சமயம் பேகம்கள் இருக்கும் மஹலில் ஒரு கோலாகலம் ஏற்பட்டது. எந்தெந்த ஆடை அணிந்தால் யார் யார் அழகாக இருப்பார்கள்? எந்தெந்த அலங்காரத்தால் யார் யாருடைய சௌந்தரியம் அதிகம் சோபிக்கும்? இந்தச் சச்சரவில் ரங்க மஹலிலுள்ள ரூபசுந்தரிகள் ஆழ்ந்து கிடந்தனர். தரித்திர ஜனங்கள் இஷ்டானுசாரப் பொருள் கிடைக்க வேண்டும் என்ற ஆசையாலும், பெரிய மனிதர், அரண்மனை உத்தியோகஸ்தர்கள் கௌரவமும் உயர் பதவியும் கிடைக்கும் என்ற ஆசையாலும், மகிழ்ந்திருந்தனர். அந்த ஆனந்தமயமான இரவு எல்லோருக்கும் சுகமாகவே கழிந்தது.

ஆதரவில்லை! அழைப்பில்லை! அனுதரவுடன் மேஹர் தன் விடுதியில் படுத்திருந்தாள். அந்த வீட்டின் உள்ளே மங்கிய வெளிச்சமுள்ள தீபங்கள் பிரகாசித்துக்கொண்டிருந்தன. அந்த மங்கிய ஒளியில்கூட அவள் தேக சௌந்தரியம் அதிக எடுப்பாகத் தோற்ற மளித்தது.

கதவு திறந்திருப்பதைக் கண்டு ருஸ்தும் உள்ளே பிரவேசித்தான். அங்கே அவன் பார்த்ததைக் கண்டு தன்னை மறந்தான். ஆனந்தங் கொண்டான்! தன்வசமற்றான்! ஒரு முறை முன் சென்றால் பன் முறை பின் வாங்குகிறான்! பார்ப்பதால் ஆசை அடங்கவில்லை! கண்களின் இமைகள் அசையவில்லை. ஆத்மாவுக்குத் திருப்தி ஏற்படவில்லை. இவ்வளவு அழகு! ஆயுள்வரை பார்த்தால்கூடத் திருப்தியாகி விடுமா?

அவன் கையில் மலராத ரோஜா மொட்டு இருக்கிறது!' வெறி கொண்டு பயமற்றுப்போன துராசையுள்ள ஹிருதயத்தின் அன்புப் பரிசு அது! ருஸ்துமுக்கு இரண்டொரு வார்த்தைகள் பேசவேண்டுமென்று ஆசை. ஆனால் அவன் வாய் அடைபட்டுவிட்டது. சீச்சீ! அவள் தூக்கம் கெட்டு விடாதா? அவளுடைய கோமள சரீரத்தை ஸ்பரிசித்துச் சுகமடையவேண்டுமென்று அவன் மனம் எண்ணியது. ஆனால் மறைமுகமான ஒரு சக்தி அவன் கால்களையும் கைகளையும் இழுத்தது. அவன் மனம் மலர்ந்தது. சிவந்த மலரிதழ் போன்ற அவளுடைய அதரங்களில் முத்தத்தின் ஒரு ரேகையைப் பதிக்கவேண்டுமென்று எண்ணியது. ஆனால் அவன் செவிகளில் யாரோ, 'சீச்சீ! பாபி! அப்படிச் செய்துவிடாதே! தேவதைகளின் உணவை எச்சில் செய்துவிடாதே!' என்று சொல்வது போல் தோன்றியது.

அந்த ரோஜா மொட்டுடன் ருஸ்தும் மெள்ள மெள்ள மேஹரின் படுக்கை யருகே வந்து அதைப் படுக்கை மேல் வைத்தான். மீண்டும் ஒரு முறை அவன் அந்தப் புவன மோகினியின் எழிலை மனங்கொண்டு பார்த்துப் பருகி நின்றான். அவன் ஹிருதயத்தில் இன்ப அலைகள் வந்து மோதின. பியாரி அவனிடம் என்ன சொன்னாளோ அதை அவனால் செய்ய முடியவில்லை! தூங்கும் சரீரத்தை எடுத்துச் செல்வது ஒருபுற மிருக்கட்டும்! அவன் அவளை ஸ்பரிசிக்கக் கூட முடியவில்லை! அவன் கண் முன் யாரோ நரகத்தின் திரையை விலக்கிவிட்டார்கள்! அந்தக் கோரக் காட்சியைக் கண்டு ருஸ்தும் பயந்து போனான்!

சமயம் இல்லை! அதிகத் தாமதம் செய்வதால் அவன் உயிரை இழக்க நேரிட்டாலும் நேரிடலாம். பியாரி அதிக நேரம் வரை பொறுக்கமாட்டாள்! ருஸ்தும் ஆசையும்

அதிருப்தியும் நிறைந்த ஹிருதயத்துடன் திரும்பினன். அவன் உள்ளத்தில் ஓர் அக்னி ஜ்வாலை கொழுந்துவிட்டெரிந்தது. அறையினின்றும் அவன் வெளியே வந்தான். உடைந்த ஹிருதயத்துடன், உளறும் குரலில், 'பியாரி! சர்வநாசினி! உன் வற்புறுத்தலைக் காலால் மிதித்துவிட்டேன்! மேஹர்ஜான் எவ்வளவு அழகு! எவ்வளவு புனிதமானவள்! அவள் உன்னை எவ்வளவு விரும்புகிருள்! முடியாது! இந்த வாழ்நாளைப் பூராவும் எரியவிட்டு நஷ்டமாக்குவேன்! ஆனல் பியாரி! ஏ, பிசாசே! உன் வார்த்தையைக் கேட்கமாட்டேன்!' என்ருன்.

ருஸ்தும் பைத்தியம் பிடித்தவனைப் போல வெளியே சென்ருன். எதிரே கோட்டை வாசலில் யாரோ நின்றிருந்தனர். பியாரிதான் நிற்கிருள் என்று எண்ணி, 'பியாரி! தாமத மாகிவிட்டது! மன்னித்துக்கொள்! நான் உனக்கு உதவிசெய்ய முடியவில்லை!' என்ருன்.

பியாரி என்றழைத்து ருஸ்தும் என்ன சொன்னுனே அதற்குப் பதில் அவனுக்குக் கிடைக்கவில்லை. அந்த இருளில் ருஸ்தும் கூர்ந்து கவனித்தான். பியாரி பேகம் அல்ல! பியாரி ஆகிருதியில் சிறியவள். இதுவோ ஆஜானுபாகுவான சரீரம்! யார் இது? இது ஸ்திரீயல்ல! புருஷனைப் போல் தோன்றுகிறது. ருஸ்தும் பயத்தால் நடுங்கினுன்.

கம்பீரமான குரலில் எதிரே நின்ற புருஷன், 'நீ யார்?' என்று கேட்டான்.

'நீ யார்?' என்ருன் ருஸ்துமும்.

அந்தப் புருஷன் பதில் கொடாமல் முன் வந்து ருஸ்துமின் கையை இறுக்கிப் பிடித்துக்கொண்டு, 'பாபி! சைத்தான்! இந்த இரவில் மேஹர்-உன்னிஸாவின் அறைக்குள் என்ன செய்யச் சென்ருய்? ஆஹா, எல்லாம் சர்வநாசம்!' என்ருன்.

இந்தக் குரலைக் கேட்டு அந்தப் புருஷனை யார் என்று அறிந்துகொண்டான் ருஸ்தும். மரணம் தலைக்குமேல் நடன மிட்டது. அவன் நடுங்கிக்கொண்டே, 'ஜஹாம்பனுஹ்! ஷா ஹன்ஷாஹ்! என்னைக் கொன்றுவிடுங்கள்! நான் பாபி! நம்பிக்கைத் துரோகி!' என்றான்.

அந்த மாறுவேடம் புனைந்த மனிதன் வேறு யாருமல்ல, டில்லி அதிபதிதான். அந்தக் கம்பீரமான இரவில், ரொம்ப யோசித்து, மேஹரைத் தாமே அழைப்பதற்காக மறைந்து வந்திருந்தார். மேஹர்-உன்னிஸாவின் படுக்கை யறையில் ஒரு புருஷனைக் கண்டு, அவர் ஸ்தம்பித்து மறைந்து நின்று, அந்தத் துராத்மாவின் செய்கையைப் பார்த்துக்கொண்டிருந் தார். அவன் வெளியே வந்ததும் அவர் கோட்டை வாசலில் வந்து நின்றார். அந்த வழியைத் தவிர கோட்டையினின்றும் வெளியேற வேறு வழி கிடையாது.

ஜஹாங்கீர் கம்பீரமான குரலில், 'ருஸ்தும்! ஈ எறும்பு நுழைய முடியாத இந்த அறையில் நீ யாருடைய சகாயத் தால் நுழைந்தாய்? இப்பொழுது பியாரி பேகத்தின் பெய ரைச் சொன்னு யல்லவா? ஏன் அவள் பெயரைச் சொன் னாய்?' என்று கேட்டார்.

ருஸ்தும் யாதொரு பதிலும் கூறவில்லை. அவன் உடல் நடுங்கியது.

பாதுஷா அவன் கையை விட்டுவிட்டு, 'ருஸ்தும், உன்னை யோக்கியன் என்றெண்ணி, உன்னுடைய தந்தையின் குணத்தையும் உன்னி, உன்னைச் சிறு வயதிலேயே இந்தப் பெரிய பதவியில் நியமித்தேன். நீ அதை முற்றிலும் துர் விநியோகம் செய்துவிட்டாய்! நான் ஆசைப்பட்ட தனம் - எதைக் காண எனக்கே தைரியம் ஏற்படவில்லையோ - அந்த மேஹர் - உன்னிஸாவின் பவித்திரமான அறை இன்று உன்னல் களங்கப்படுத்தப்பட்டது. அவளுடைய

புனிதமான தேகம் உன்னுடைய நாற்றக் கையின் ஸ்பரிசத்தால்......' என்று குமுறினார்.

ருஸ்தும் பதட்டத்துடன், 'பிரபோ! டில்லி ஈசுவரா! என் வார்த்தையை நம்புங்கள்! நம்புவீர்களா? மேஹரின் பவித்திரமான தேகத்தைத் தொட என் போன்ற நீசர்களால் முடியாத காரியம்! ஆனால் கண்களால் பார்ப்பதுகூடப் பாபமா?' என்றான்.

'உன்னை மஹலுக்குள் யார் விட்டார்கள்?'

ருஸ்தும் மண்டியிட்டுத் தரையில் அமர்ந்து கண்ணீர் பொங்கும் கண்ணுடன், 'ஜஹாம்பனாஹ்! என்ன தண்டனை உண்டோ அதை எனக்கு அளித்துவிடுங்கள்! ஆனால் அதை நான் சொல்ல முடியாது! இப்பொழுதே தங்கள் வாளினால் என்னை வெட்டிவிடுங்கள்!' என்றான்.

'உனக்கு மரணம் ரொம்ப சாதாரண தண்டனை. நான் உன்னை உயிருடன் நாய் நரிகளுக்கு இரையாக்குகிறேன்!'

ருஸ்தும் உலர்ந்து போன குரலில், 'அதையும் சகிப்பேன்! ஜஹாம்பனாஹ்! ஆனால் நம்பிக்கைத் துரோகம் செய்யமாட்டேன். ஒருமுறை அம்மாஜிரி வாக்குக் கொடுத்து விட்டேன். இனி அதைத் திருப்பித் திருப்பிச் சொல்ல முடியாது!' என்றான்.

ஜஹாங்கீர் ஷா கோபத்துடன், 'யார் அங்கே!' என்றார்.

இரண்டு காவலர் வந்து சலாம் செய்து நின்றனர். 'இந்த அபாக்கியவானை விலங்கிட்டுச் சுரங்க ஜெயிலில் கொண்டு வையுங்கள்!' என்று உத்தரவிட்டார் பாதுஷா.

ருஸ்தும் அழுதுகொண்டே, 'பிரபோ! சந்தோஷத்துடன் தங்கள் தண்டனையைச் சிரமேல் தரிக்கிறேன்! மரணம் தலைமேல் கூத்திடுகிறது. பொய் சொல்லமாட்டேன். தலைமேல் சக்கரவர்த்தியின் சக்கரவர்த்தியானவர், யாவற்றையும்

பார்த்துக்கொண்டிருக்கிறார். மேஹர்-உன்னிஸா களங்கமற்றவள். அதற்குக் கடவுளே சாட்சி!' என்றான்.

காவலர்கள் அவனைச் சிறைக்கு இழுத்துச் சென்றனர். பாதுஷா மேஹரின் அறையில் நுழையவில்லை.



பதினேராம் அத்தியாயம்

சிலருடைய நாட்கள் சுகமாகக் கழிகின்றன. சிலருடைய நாட்கள் துக்கத்துடன் கழிகின்றன. சுகத்துடன் காலங் கழிப்பவர்கள் தங்கள் வாழ்நாள் பூராவும் அப்படியே கழியட்டும் என்று எண்ணுகிருர்கள். ஆனல் நாள் யாருக்கும் தடையாக இருப்பதில்லே.

பாதுஷாவின் ஜன்மோத்ஸவ தினம் ஆனந்தத்தோடு முடிந்தது. நகரில் அலங்கரிக்கப்பட்டிருந்த கொடிகள் இப்பொழுதும் அப்படியே இருந்தன. அந்தச் சுபமான நாள் இருவருக்கு மாத்திரம் ஆனந்த மில்லாமல் கழிந்தது. யாருக்கு ஜன்மோத்ஸவம் நடந்ததோ அந்த மனிதரான டில்லி பாதுஷாவும், ஆதரவற்று, நிராசையால் சலித்த மேஹர்-உன்னிஸாவுமே அவர்கள்.

இரவு முதல் ஜாமம் கழிந்தது. மேஹர் தன் அறையில் உட்கார்ந்து வாடிய உள்ளத்துடன் ஏதோ யோசனே செய்துகொண்டிருந்தாள்: 'இத்தனே நாட்களாக எப்படியெல்லாம் வீணுயின! இந்த ஆனந்தமான தினத்தில் அவர் எல்லோருக்கும் சுகமளித்தார். ஆனல் நான் அவருக்கு என்ன அபராதம் செய்தேன்? இந்த மாதிரி கைதியைப் போலக் காலம் கழிப்பது எனக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. கல்யாணி, பிரிய சகி கல்யாணி! அவள்தான் இங்கே ஒரு முறை வரக்கூட இல்லேயே! ஆஹா, என் துர்பாக்கியம்!'

'வாழ்க்கை சூனியமாக இருப்பவர்கள் உயிர் வாழ்ந்துதான் என்ன பயன்? ஜீவன பரியந்தம் ஹிருதயத்தில் தீ ஜ்வாலேயை வைத்துக்கொண்டிருப்பதை விட அதை அணேத்து விடுவது நல்லதல்லவா? ஆசை, நம்பிக்கை, காதல், அன்பு, ஆதரவு — எல்லாம் போய்விட்டது. இந்த ஜீவன

தீபம் இன்று அணைய வேண்டியதுதான். அனுகரவு ஏற்பட்டால் மரணம் என்று கல்யாணிதான் சொன்னாளே !' என்று சிந்தனையிட்டாள் மேஹர்.

மேஹர் ஆகுல பாவத்துடன் மேலே பார்த்தாள். அவளுடைய மலினமடைந்த முகத்தில் கண்ணீர்த் தாரைகள் வழிந்தன. ஹிருதயத்தைப் பிளந்துகொண்டு எழுந்தது ஒரு பெருமூச்சு! வாழ்க்கையில் நிராசை! எதிரே விஷம் நிறைந்த பாத்திரம்! இன்று எல்லாம் சாந்தமாகிவிடும் என்று அவள் எண்ணினாள். தாதிகளுக்கு ஆனந்தம் கொண்டாட விடுமுறை யளித்துவிட்டாள்! இதைத் தவிர தகுந்த தருணம் எப்பொழுது கிடைக்கும்? ' இன்று இறப்பேன்! ஹே ஜகதீச்வரா! ஹே தயாமய! கதியற்றவர்களின் கதியே! நீ சாட்சி! இனி இந்தத் துக்கத்தைச் சகிக்க முடியாது! இந்த வெறுப்புற்ற வாழ்க்கை பிடிக்கவில்லை. ஹே, ஹிருதயேச்வரா! நீ எங்கே இருக்கிறாய்! உன் ஹிருதயத்தில் வைத்துக்கொண்டிருந்தாய்! இன்று உன் சமாதியின் அருகே, சுகத்துடன் பர்த்வானில் மரிக்க என்னால் முடியவில்லை. இதுதான் துக்கம்! ஹே உலக சக்ரவர்த்தியான பாதுஷாவே! உன்னுடைய எல்லையற்ற பொறுமை தன்யமாகட்டும்! உன்னுடைய கருணை வளரட்டும்! உன் அன்பு, உன் காதல் என் உள்ளத்தை விட்டு மறையாது!' என்று அவள் குமுறினாள்.

எதிரே விஷப் பாத்திரம் இருக்கிறது! உதட்டைத் தீண்டிய மாத்திரத்தில் எல்லா ஜ்வாலையும் அடங்கிவிடும். மேஹரால் ஆசையை விட முடியவில்லை. அவள் மெள்ள மெள்ள விஷப் பாத்திரத்தை உதடுவரை கொண்டுபோனாள். அந்த விஷ கணங்கள் அவள் நாக்கை ஸ்பரிசித்தன. ஒரு கணம் அவள் தலை சுற்றியது. இதே சமயம் ஒரு பெண் பின்புறம் ஓடிவந்து அவள் கையிலிருந்த விஷப் பாத்திரத்தைப் பிடுங்கி எறிந்தாள்.

மேஹருக்கு ஸ்மரணை இருந்தது; கண் திறந்து பார்த்தாள். அவள் சகி கல்யாணி நின்றிருந்தாள். கல்யாணி மேஹரைத் தன் மார்புடன் அணைத்து, அழுதுகொண்டே, 'சகி, நீ என்ன காரியம் செய்தாய்? இம்மாதிரி சர்வநாசம் ஏன் செய்தாய்? ஆஹா! நான்தான் எப்பேர்ப்பட்ட அபாக்ய வதி! கொஞ்சம் சீக்கிரம் வந்திருந்தால்.........' என்றாள்.

'சரி! இவ்வளவு நாட்களாக என்னுடைய சாதனைகள் யாவும் அழிந்தன. உன் மடியில் தலை வைத்துக்கொண்டு இறக்கிறேன்! இந்த ஆனந்தத்தால் என் உள்ளம் பூரிக்கிறது. நீ நாளை வருவதாகக் கேள்விப்பட்டேன். முன்னாடியே வந்துவிட்டாய்!' என்றாள் மேஹர்.

'தெய்வ வசமாக வர முடியவில்லை! ராஜா பிடித்துக் கொண்டார்! இனி என்ன உபாயம்? வைத்தியனைக் கூப்பிடட்டுமா?'

கறுத்து உலர்ந்த மேஹரின் அதரங்களில் சிரிப்பின் ரேகை படர்ந்தது. 'எவ்வளவு விஷம் குடித்திருக்கிறேன் என்று தெரியுமா? வைத்தியன் என்னை என்ன செய்ய முடியும்?' என்றாள்.

கல்யாணி தன் தாதியை மஹாராணி ஜோதாபாயியிடம் அனுப்பினாள். வேலைக்காரி சென்று விஷயத்தைச் சொன்னதும், மஹாராணி ஒரு கிழ வைத்தியனுடன் மேஹர் இருக்குமிடம் வந்து சேர்ந்தாள்.

வைத்தியன் மேஹரின் நிலைமையைப் பரிசீலனை செய்து, 'பயமொன்று மில்லை! வயிற்றில் அதிக விஷம் இல்லை. மருந்து கொடுக்கிறேன். சீக்கிரம் குணமாகிவிடும்!' என்றான்.

கல்யாணி மேஹரைத் தன் மடியில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். மஹாராணி தன் கையினாலேயே மருந்துகளைக் கொடுத்தாள். சற்று சொஸ்தமானதும் கல்

யாணியும் ஜோதாபாயியும் மேஹரைச் சுகமாகப் படுக்கையில் படுக்க விட்டார்கள்.

மேஹர் தூங்குவதைக் கண்ட ராணி, ' நான் சென்று வருகிறேன்! அடிக்கடி செய்தி யனுப்புங்கள்!' என்று சொல்லிச் சென்றாள்.

*　　*　　*

இரவு இரண்டாம் ஜாமம். மேஹர் நன்கு சொஸ்த மானாள். நல்ல நினைவு வந்து கண் திறந்து பார்த்தாள். இதைக் கண்டு கல்யாணியின் சந்தோஷத்திற்கு ஓர் எல்லையே இல்லை. அவள் மேஹரின் காதோடு, 'மேஹர், சொல்லு! எப்படி யிருக்கிறாய்?" என்றாள்.

'கொஞ்சம் சௌகரியமாக இருக்கிறது. ஆனால் நீ ஏன் என்னைக் காப்பாற்றினாய்? இறந்திருந்தால் நன்றாக இருந் திருக்குமே!'

'சீச்சீ! இனி இம்மாதிரி சொல்லாதே. இறப்பது ஓர் ஆச்சரியமல்ல! நான் ஒரு கணம் தாமதித்து வந்திருந்தால் ஒன்றும் மிச்சமிருக்காது! நீ சௌக்கியமடைய வேண்டும். பிறகு இந்தப் பாப நகரைத் தியாகம் செய்துவிடுவோம்! இப்பொழுது தூங்கு!'

மேஹர் கண்களை மூடினாள். கல்யாணி விசிறியை எடுத்து விசிறிக்கொண்டிருந்து, அவள் உறங்கினதும் ஒரு தாதியை அழைத்து அங்கு வைத்துவிட்டு, வெளியே வந்து உலாவினாள். ஆறும் பிறைச் சந்திரன் மெல் லிய ஒளி வீசிக்கொண்டிருந்தான். நகரம் மங்கிய சந்திர வெளிச்சத்தில் மூழ்கிக் கிடந்தது. அந்தச் சமயம் வாசற்படி யில் யாரோ வருவதைக் கண்டாள் கல்யாணி! அவன் ஒரு புருஷன்.

அந்தப் புருஷன் வாசற்படியில் ஒரு ஸ்திரீ நிற்பதைக் கண்டு படியின் அருகே வந்து நின்றான். கல்யாணி அந்த

மங்கிய நிலவொளியில் அந்த மனிதனை யார் என்று அறிந்து கொண்டாள். ஆனால் ஒன்றும் பேசவில்லை.

வந்த மனிதன் வாசற்படி யருகே வந்து, வருத்தமான குரலில், 'நீ யார்? வழியை விடு!' என்றான்.

கல்யாணி ஒரு கடும் சிரிப்புடன், 'ஜஹாம்பனாஹ்! என்னை அறிந்துகொள்ள முடியவில்லையா?' என்றாள்.

இந்தத் தடவை ஜஹாங்கிர் அறிந்துகொண்டார். அவர் ஆவலுடன், 'கல்யாணி! தேவி கல்யாணி! எப்பொழுது வந்தாய்? நீ இங்கே எப்படி வந்தாய்?' என்றார்.

'யாருக்கு உலகில் எவரும் இல்லையோ அவர்களுக்காகக் கடவுள் என்னை இங்கு அனுப்பினார். தங்களுக்கு என்ன வேண்டும்?'

'கல்யாணி! மேஹர் விஷம் குடித்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன்! உண்மைதானா?'

'முற்றிலும் உண்மை! எல்லாம் ஒழிந்தது. இனி தங்கள் கீர்த்தி இன்னும் பன்மடங்கு அதிகரிக்கும்!'

பாதுஷாவின் கண்களினின்று கண்ணீர் பெருகியது. 'எல்லாம் ஒழிந்ததா? கல்யாணி! என்ன பேசுகிறாய்?'

'இந்த ஏழை டில்லி அதிபதியிடம் வார்த்தையாட முடியாது!'

'சரி, ஆனால் வழியை விடு! ஒரு முறை அவளைப் பார்க்கிறேன்! இவ்வளவு நாட்களாக அவளைப் பார்க்கவில்லை! இன்று பார்க்கிறேன்! என் பாபத்திற்கு ஏதாவது பிராயச்சித்தம் செய்துகொள்ள முடியுமானால் அதைச் செய்து கொள்ளுகிறேன். அவளுடைய சுந்தர முகத்தைக் கண்டு ஆயுள்வரை மர்ம ஜ்வாலையால் எரிகிறேன்!' என்று கூறி, அபராதியைப் போல மலினமான முகத்துடன், டில்லி அதிபதி மேஹரின் அறையில் நுழைந்தார். அவர் ஹிருதயம் நடுங்கியது. அவர் உள்ளத்தில் சொல்ல முடியாத ஒரு

கிளர்ச்சி! அவர் மனத்திற்குள், 'மேஹர்! பிரியமே! என்னை மன்னித்துவிடு! இன்று கள்ளனைப் போல் உன்னிடம் வருகிறேன்! ஒரு முறை கண் திறந்து பார்!' என்ருர்.

மேஹர் கண் திறந்தாள். அந்தப் பார்வை பாதுஷாவின் உள்ளத்தில் அன்பையும் ஆதரவையும் பாய்ச்சியது. இருவர் கண்களும் சந்தித்தன. மேஹர்-உன்னிஸா படுக்கையினின்றும் எழுந்து உட்கார முயற்சித்தாள்.

பாதுஷா மேஹரின் அருகே அமர்ந்து, 'மேஹர்! எப்படியிருக்கிருய்?' என்ருர்.

மேஹர் பதில் ஒன்றும் கூறவில்லை. அவளுடைய அன்பு நிறைந்த கண்களால் கண்ணீரை மாத்திரம் பெருக்கினுள்.

'நான் அபராதி! மன்னிப்புக் கோருகிறேன்! என்னை மன்னிப்பாயா?' என்ருர் பாதுஷா.

மேஹர் மெள்ள எழுந்து உட்கார்ந்து, கஷ்டத்துடன், 'பாதுஷா! ஜஹாம்பனுஹ்!' என்ருள்.

வாயினின்றும் வார்த்தை வெளிவரத் தயங்கியது. அங்கு யாரும் இல்லை. ஆயினும் அவளுக்கு வெட்கம். பாதுஷா மேஹரின் முகவாயைப் பற்றி, 'ஹிருதயேச்வரி! நான் பாதுஷாவாக இருந்தாலும் மனிதன்தான். அதுவும் பிரமையுள்ள மனிதன்! எந்தப் பியாரி பேகத்தின் செய்கையால் இவைகளெல்லாம் நடந்தனவோ அவள் கைது செய்யப்பட்டுவிட்டாள். இன்றைத் தினத்திலிருந்து நீதான் டில்லியின் ஈச்வரி! ஆனல் சொல்! நீ என்னை மன்னிப்பாயா?' என்ருர்.

மேஹர்-உன்னிஸா வணக்கமான குரலுடன், 'ஜஹாம்பனுஹ்! இந்த அடிமை ஓர் ஏழை! இவளிடம் தாங்கள் என்ன மகத்தான பிழை இழைக்க இருக்கிறது? தாங்கள் தங்கள் வாயினுல் தோஷத்தை ஒப்புக்கொண்டீர்கள். இதுவே தங்கள் உதாரத்வம்! பாக்கியத்தின் தோஷத்தால் எது நடந்ததோ அது சகஜமாக மறந்துபோய்விடும்!' என்ருள்.

ஜஹாங்கீர் மேஹர்-உன்னிஸாவை ஆலிங்கனம் செய்து கொண்டார். இருவர் முகத்திலும் சிரிப்பு மலர்ந்தது. கல்யாணியும் மஹாராணியும் பின்னால் நின்று இதைப் பார்த்துக்கொண்டிருந்தனர். மஹாராணி ஜோதாபாயி, சிரித்துக் கொண்டே அறைக்குள் வந்து, ஜஹாங்கீரின் இடது புறம் நின்று, 'பிரிய ஸகி! மேஹர்! உனக்காக நான் சிம்மாசனத்தை விடுகிறேன்! இனி நீ சுகமடை!' என்றாள்.

மேஹர்-உன்னிஸா மஹாராணியின் பாதங்களில் விழுந்தாள். மஹாராணி மறித்து, 'சீச்சீ! இதென்ன மேஹர், இது?' என்றாள்.

மேஹர்-உன்னிஸா கண்களில் கண்ணீர் பெருக, 'தேவி சிம்மாசனம் என்னால் களங்கப்பட்டுவிடும்! நீங்கள் பட்டத்து ராணி! அது தங்களுக்கே யோக்கியமானது!' என்றாள்.

அந்த இரவு இவ்விதமாக ஆனந்தத்துடன் கழிந்தது. மறுநாள் காலையில் பாதுஷா, 'இன்றைய தினத்திலிருந்து மேஹர்-உன்னிஸா "நூர்ஜஹான்" என்ற பெயருடன் டில்லிச் சக்கரவர்த்தினியாகிறாள்!' என்று பிரகடனம் செய்தார்.

நூர்ஜஹான் பேகத்தின் உதார குணத்தால் ருஸ்தும் அலி விடுதலையடைந்து தன் பதவியைப் பெற்றான். பியாரி பேகம் சிறைச்சாலையில் விஷம் குடித்து தன் ஜ்வாலையைத் தணித்துக்கொண்டாள். பிற்காலத்தில் ஜஹாங்கீர் நூர்ஜஹான் சொற்படி ஆடினார் என்பது பெரும் கதை! அவள் உத்தரவின்றி அவர் எந்த ராஜ்ய காரியத்தையும் செய்ததில்லை. நூர்ஜஹான் மொகல் சாம்ராஜ்யத்தின் ஜோதியாக விளங்கினாள்.



பெண்

ஆசிரியர் — ஸியாராம் சரண குப்தர்

மொழிபெயர்ப்பாசிரியர்

கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார்

ரூ. 1-12-0 :: தபால் செலவு 0-4-0

ஸியாராம் சரண குப்தர் புகழ்பெற்ற ஹிந்தி கவிவாணரான மைதிலீ சரண குப்தருடைய சகோதரர். ஓர் இந்தியப் பெண்ணின் தியாக வாழ்க்கையை அடிப்படையாக வைத்துக்கொண்டு இந்த நாவலை எழுதியிருக்கிறார். படிக்கப் படிக்க இனிமையாயும், படித்த பிறகு மனத்திற்கு அதிகச் சாந்தியைக் கொடுப்பதாயும் உள்ளது. பாரத நாட்டு நாகரிகம், இந் நாட்டு ஸ்திரீ ரத்தினங்களின் உயரிய மனப்பண்பு முதலியவை இதில் அழகாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஆணும், சிறப்பாக ஒவ்வொரு பெண்ணும் படிக்கவேண்டிய கதை.

கிரஹ தாகம்

ஆசிரியர் — சரத் சந்திர சட்டர்ஜி

மொழிபெயர்ப்பாசிரியர் — அ. கி. ஜயராமன்

பாகம் I ரூ. 1-12-0	::	தபால் செலவு	0-4-0
,, II ரூ. 1-12-0	::	,,	0-4-0

சரத் சந்திரர் வங்க இலக்கியத்திற்குப் புத்துயிர் அளித்த பேராசிரியர்.

சரத் சந்திரருடைய கதைகள் மிக அருமையாயிருந்ததைக் கண்டு, ஒரு சமயம் தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் தம்முடைய பத்திரிகைக்கு ஒரு கதை எழுதி யனுப்பும்படி கேட்டிருந்தார். சரத் பாபு அனுப்பிவைத்தார். அதற்குச் சித்தரஞ்சன் எவ்வளவு பணம் கொடுத்தார், தெரியுமா? ஒரு செக் எழுதி, அதில் தொகை மட்டும் குறிப்பிடாமல், 'உங்களுடைய அழகிய கதைக்கு நானே விலை மதிப்பிடும்படியாக நான் அவ்வளவு மரியாதைக் குறைவுள்ளவனில்லை. காலியான இடத்தில் உங்களுக்கு இஷ்டமான தொகையை எழுதிக்கொள்ளக் கூச்சப்பட வேண்டாம்?' என்று பதிலும் அனுப்பினார். உண்மையிலேயே, சரத் சந்திரரின் நூல்கள் தொகை போடாமல் செக் எழுதிக் கொடுத்துப் பெறவேண்டிய நூல்கள்தான்.

இப்பொழுது அவருடைய இரண்டு நாவல்களை வெளியிட்டிருக்கிறோம்.

தேவதாஸ்

ஆசிரியர் — சரத் சந்திர சட்டர்ஜி

அ. கி. ஜயராமன் மொழிபெயர்த்தது

ரூ. 1-0-0 : : தபால் செலவு 0-3-0

இந்த நாவலில் சரத் சந்திரர் மூன்று முக்கிய கதாபாத்திரங்களைச் சிருஷ்டித்திருக்கிறார். தேவதாஸ், பார்வதி, சந்திரமுகி! தேவதாஸ் ஒரு ஜமீன்தார். பார்வதி அவனுடைய இளம் பிராயத்துக் காதலி. சந்திரமுகி ஒரு தாஸி. நெஞ்சை உருக்கும் இவர்களுடைய இந்தக் கதை ஒன்று போதும் சரத் சந்திரருடைய பெருமையை விளக்குவதற்கு.

காலத்திற்கு ஏற்ற நூல்!

பாகிஸ்தான்

[ஜின்னு—பின்னம்]

ஆசிரியர்— வி. மஹாலிங்கய்யர், எம். ஏ.

தினமணி ஆசிரியர் ஏ. என். சிவராமனுடைய முன்னுரையுடன்

விலை ரூ. **1-0-0** :: தபால் செலவு **0-3-0**

பாகிஸ்தான் வருமா, வராதா? வந்தால், நல்லதா, கெட்டதா? இந்தப் பிரச்னைகளை நாம் அலசி ஆராய்ந்து உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். 'இது எங்கே நடக்கப் போகிறது?' என்று யாரும் கவனக் குறைவாக இதை ஒதுக்கிவிட முடியாது. தினந்தோறும் பத்திரிகைகளில் இதைப் பற்றிய செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன. இவ் விஷயத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு இந்தப் புஸ்தகம் இன்றியமையாத துணையாகும்.

பாகிஸ்தானைப் பற்றிய வாதங்கள், பாலஸ்தீனப் பிரிவினையால் நேர்ந்த விபரீதங்கள், அகில உலக இஸ்லாமிய இயக்கங்களின் வரலாறு, சென்ற யுத்தத்தால் ஏற்பட்ட நிலைமை, துருக்கியின் முன்னேற்றம், வகுப்புவாத விபரீதங்கள், மஹாத்மாவின் மணிவாசகங்கள், பாகிஸ்தான் பற்றிய கேள்விகளும் பதில்களும்—ஆகிய பல விஷயங்களும் இதில் மிக விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

'இந்தியாவைத் துண்டுபோட முடியுமா? போடவேண்டியது அவசியமா?' என்ற விஷயம் இதில் முடிவுகட்டிக் கூறப்பட்டிருக்கிறது.

இந்திய அரசியல் பிரச்னையில் ஆர்வமுள்ள ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய புஸ்தகம். பல சரித்திரப் புஸ்தகங்களை வாங்கிப் படிக்கும் பயனை இந்த ஒரு நூலில் பெறலாம்.

மழையும் புயலும்

ஆசிரியர் — வ. ரா.

240 பக்கம் உயர்ந்த பதிப்பு
விலை ரூ. **1-8-0** : : தபால் செலவு **0-4-0**

இந் நூலில் ஆசிரியருடைய 44-கட்டுரைகள் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு கட்டுரையும் உள்ளத்தைச் சிந்திக்கத் தூண்டுவது. இக் கட்டுரைகள் புயலையும் மழையையும் போலவே, கொந்தளிப்பையும் குளிர்ச்சியையும் கொடுக்கக் கூடியவை.

நடைச் சித்திரம்

ஆசிரியர் — வ. ரா.

250 பக்கம் உயர்ந்த பதிப்பு
விலை ரூ. **1-8-0** : : தபால் செலவு **0-4-0**

தமிழ்நாட்டில் வாழும் மக்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு பேனாவால் சித்திரித்திருக்கும் 37-சித்திரங்களே இந்த நூல்.

இந் நூலைப் பற்றிய பத்திரிகை அபிப்பிராயங்கள்:

'தினமணி'

'புஸ்தகத்தைக் கையில் எடுத்தால் முழுதும் படிக்காமல் கீழேவைக்க மனம் வராது.'

'ராஷ்டிரவாணி'

'"நடைச் சித்திரம்" நவீன தமிழ் இலக்கியத்தில் முக்கியமான ஸ்தானம் வகிக்கவேண்டிய நூல் என்பதில் சந்தேகமில்லை.'

'பாரத தேவி'

'அதிக மதிப்பு வாய்ந்த இச் சிறந்த நூலுக்கு அதிக மதிப்புரை அனாவசியம்.'

'பிரீ இந்தியா'

'ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு வாசகசாலையிலும் இருக்கவேண்டிய புஸ்தகம் இது.'

தேவிட்டாத கதைகள்!

புதுமைப் பித்தன் கதைகள்

ஸ்ரீ ரா. ஸ்ரீ. தேசிகர், எம். ஏ. எழுதிய முன்னுரையுடன்

300 பக்கம் விலை ரூ. 2 பரிசுப் பதிப்பு ரூ. 2-12-0

தபால் செலவு 0-4-0

சிறந்த சிறுகதை எழுத்தாளரான 'புதுமைப் பித்தன்' அவர்களுடைய 29 - தேர்ந்தெடுத்த கதைகள் இந் நூலில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கதையும் ஒரு தனி ரகம்.

இந் நூலைப் பற்றிய மதிப்புரைகள்

'அவருடைய கதைகள் அவர் உள்ளத்து ரகசியங்களை எனக்குப் பறையடிக்கின்றன......சிறுகதை மர்மங்களை நன் கறிந்துள்ள "புதுமைப் பித்த"னின் கதைகளுக்கிடையே திரியும் பொழுது ஒரு கவி - யுலகிலே திரிகிற உணர்ச்சி எனக்கு வருகிறது.' — ரா. ஸ்ரீ. தேசிகர், எம். ஏ.

'முதலாவது நம் கவனத்தைக் கவருவது அவருடைய நடை. இரண்டாவது அவருடைய கற்பனை. இரண்டும் அவருக்கென்றே தனி விதத்தில் அமைந்திருக்கின்றன.' — தினமணி

'கதை ஒவ்வொன்றும் அபாரமான கற்பனையாகும்...புஸ்தகத்தின் அமைப்பு முதல்தரம்.' — ஹநுமான்

'சுருக்கமாகச் சொன்னால், தமிழர்கள் படிக்கவேண்டும் நூல் இது.' — தனவணிகன்

'பேசும் சினிமாப் படக் கொத்து.' — தினகரன்

'ஆரம்ப முதல் அந்தம் வரையில் தெவிட்டாத தன்மையுடையதாய் அமைந்திருக்கிறது.' — பாரத தேவி

'"புதுமைப் பித்தன்" புதிய தந்திகளை மீட்டுகிறார்... ஆசிரியரின் பட - ரேகைகள் விசாலமாயும், உறுதியாயும், கற்பனை வளத்துடனும் பதிந்திருக்கின்றன. அவருடைய வர்ணங்கள் ஜோதியும் தெளிவும் கொண்டு பிரகாசிக்கின்றன.'

— பிரீ இந்தியா

வின்ஸ்டன் சர்ச்சில்

ஆசிரியர் — ஆ. காசிவிச்வநாதன்

ரூ. 1-8-0 :: தபால் செலவு 0-3-0

வீரம் நிறைந்த பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலுடைய சரித்திரம் இது. அவர் போர் செய்ததும், ஒரு சமயம் கைதியாயிருந்ததும், அரசியலில் இறங்கியதும், இன்று ஏகாதிபத்தியத்திற்குத் தலைமை வகிப்பதும் உள்ளக் கிளர்ச்சி உண்டாக்கும் அபூர்வ அனுபவங்கள். தற்கால உலக சரித்திரம் தெரியவேண்டுமானால் இவர் சரித்திரம் படிக்கவேண்டியது அவசியம்.

விமான அசுரன் கோயரிங்

ஆசிரியர் — தி. ஜ. ர.

ரூ. 0-12-0 :: தபால் செலவு 0-2-0

ஹிட்லரின் உயிர்த் தோழரும், ஜெர்மன் விமானப் படைத் தலைவருமான கோயரிங் சரித்திரம்.

வெற்றி யாருக்கு ?

ஆசிரியர் — பொ. திரிகூடசுந்தரம், எம். ஏ., பி. எல்.

ரூ. 0-12-0 :: தபால் செலவு 0-2-0

உயர்ந்த ஒழுக்கத்தைப் போதிக்கும் 14 கட்டுரைகள். புதிய பாணியில் எழுதப்பட்டவை.

ஸப்த நதிகள்

ஆசிரியர்—காகா காலேல்கர்

மொழிபெயர்ப்பாசிரியர் — கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார்

ரூ. 0-8-0 :: தபால் செலவு 0-2-0

ஏழு இந்திய நதிகளைப் பற்றிய வர்ணனைகள். இந்த வர்ணனைகளோடு, ஆசிரியர் நமது நாகரிகத்தையும் குழைத்துப் புகட்டுகிறார். இளைஞர் எல்லோரும் வாசிக்கவேண்டிய — வாசித்துப் பெருமை கொள்ள வேண்டிய — நூல்.